★ காஞ்சிபுரம்
★ பெனுரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்

மற்றும் சகலவிதமான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும்

ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்,
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ2/50

மங்கள வைபவங்களுக்கேற்ப, உடுபுடைவைகள்

ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

சுடர்: 4 சுக்கில ஸ்ரீ வைகாசி மீ 27 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ்ஜா பிறை 4 (09 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 157

## பாடசாலைகளின் புனர்நிர்மாணத்திற்கு என ஒதுக்கப்பட்ட

# ரூபா 8½ கோடி நிதி தேக்கம்

# யாழ் கல்வித் திணைக்களத்தில்!

## தொழில் நுட்ப உத்தியோகத்தர் பற்றுக்குறையே காரணமாம்

— அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்குக் கிடைத்த 8 கோடியே 40 லட்சம் ரூபா நிதி பயன்படுத்தப்படாமல் தேங்கி உள்ளதாக அறிய வந்துள்ளது.

தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு உள்ள பற்றுக்குறையே இந்த அவலநிலைக்குக் காரணம் என்று தெரியவருகிறது.

தேங்கிக்கிடக்கும் பணம் அசம்பாவிதங்களின்போது பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் புனர் நிர்மாணப் பணிகளுக்கென பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்டதாகும்.

புனர் நிர்மாணப் பணிகளைத் திட்டமிடவும், மேற்பார்வை செய்யவும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களும், மேற்பார்வையாளர்களும் பற்றுக்குறையாக இருப்பதே இந்த நிதி தேங்கிப்போவதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருட ஆரம்பத்தில் யாழ். மாவட்டத்தின் 62 பாடசாலைகளைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 9 கோடியே 70 லட்சம் ரூபாவை வழங்கியது. இதில் சுமார் 4 கோடி ரூபாவை இதுவரையில் வேலைத் திட்டங்களுக்குச் செலவிடப்பட்டது.

எஞ்சிய 5 கோடி 70 லட்சம் ரூபாவுக்குரிய வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன.

இந்நிலையில் கடந்த மாதத்தில் கனேடிய உதவித்தொகையாகக் கிடைத்த மேலும் 2 கோடியே 70 லட்சம் ரூபா நிதி 50 பாடசாலைகளின் திருத்த வேலைகளுக்கென வழங்கப்பட்டுள்ளது.

அதைவிட மேலதிகமாக எஞ்சியுள்ள 25 பாடசாலைகளின் புனரமைப்புக்காக இரண்டரைக்கோடி ரூபா மாகாணசபை மூலம் வழங்கவிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

ஒதுக்கிடு செய்யப்பட்ட

(8ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



மொட்டைக்கு வந்த மவுசைப் பாத்தியளே...!

## துணை அமைச்சருக்கு மட்டுநகரில் கறுப்புக்கொடி!

மட்டக்களப்பு, ஜூன் 9

நேற்று (வியாழன்) காலை மட்டக்களப்புக் கச்சேரி வாசலில் வைத்து துணை அமைச்சர் கே. வின்சன்ட் பெரேராவுக்குக் கறுப்புக் கொடி காட்டப்பட்டது.

புனர் வாழ்வு சம்பந்தமான மாநாட்டில் கலந்து கொள்ள துணை அமைச்சர் வின்சன்ட் பெரேரா காலை கச்சேரி வாசலில் வந்து இறங்கினார்.

வாசலில் திரண்டு நின்ற இளைஞர்கள் துணை அமைச்சருக்கு கறுப்புக் கொடி காட்டினர்:

''அமைச்சரே திரும்பிப்போ,''

''இலங்கைப் படைகளே திரும்பிப்போ!''

— இவ்வாறான கோஷங்களும் எழுப்பப்பட்டன.

அமைச்சரும் ஐ. தே. க. மாவட்ட அமைப்பாளரான ஜனாப் ரி.எஸ்.வி சின்னலெப்பையும் வந்தார்.

மாநாடு ஆரம்பமானதும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரு தொண்டர் படைகள் கிழக்கில் அமைக்க முயற்சி

### ரஞ்சன் சபையில் தகவல்

கொழும்பு, ஜூன் 9

கல்முனை, சம்மாந்துறை, கிண்ணியா ஆகிய பகுதிகளில் சேவையில் ஈடுபடுத்த இரண்டு தொண்டர்படைகளை திரட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின முன்கண்டவாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

இந்திய அமைதிப்படை திரும்பிய பின்னர் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை யார் உறுதிப்படுத்துவது?' என்று ஐ. தே. க. எம்.பி, அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கையில் –

இப்பகுதிகளில் இலங்கைப் படையினரை பணியில் ஈடுபடுத்துவது பற்றி பரிசீலனை செய்ய இன்னும் காலம் வரவில்லை.

இரண்டு சமூகங்களின் பாதுகாப்புக்கருதி இரண்டு தொண்டர் படைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

— இப்படி அமைச்சர் சொன்னார். (உ - எ)

## முகாம்களுக்கு முன்னால் தடை; வாகனங்கள் வேறு பாதைகளில்!

யாழ். நகரை அண்டிய பகுதிகளில் நேற்று சில முகாம்களுக்கு முன்னால் தடைகள் போடப்பட்டு போக்குவரத்து வேறு பாதைகளால் திருப்பி விடப்பட்டது.

கொக்குவில், பரமேஸ்வராச் சந்தி, கட்டைப்பிராய் ஆகிய முகாம்களுக்கு முன்பாக தடைகள் போடப்பட்டிருந்தன.

எனினும் இப்பாதைகள் ஊடாக சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஆகியவை செல்ல அனுமதிக்கப்பட்டது. (ஓ-3-10)

## 417 ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு

### யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 9

''யாழ். மாவட்டத்தில் 417 ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றது. இவற்றை விரைவில் நிரப்ப கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

யாழ். மாவட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் வெற்றிடம் 109. ஆரம்ப ஆசிரியர்கள் வெற்றிடம் 1026. அத்துடன் தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர்கள், அழகியற் கலை ஆசிரியர்கள் பதவிகளுக்கும் வெற்றிடம் உண்டு.

சகல வெற்றிடங்களையும் விரைவில் நிரப்ப கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது- என்றார். [ஓ-3]

## ஈரோஸ் பிரமுகர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு!

ஈரோஸ் எம்.பிக்கள் குழு ஒன்று. கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி பிரேமதாஸாவை அவரது 'சுசரித்த' வாசஸ்தலத்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியது. –

தூதுக் குழுவிற்கு யாழ். எம்பி.. திரு. ஆர். பரராஜசிங்கம் தலைமை வகித்தார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஈழவர் முன்னணி அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதல் சந்திப்பு இதுவாகும்.

தமிழர் பிரசினைகளைத் தீர்ப்பதற்கான பேச்சுக்களைத் துரிதப்படுத்தும்படி தூதுக் குழு ஜனாதிபதியை வேண்டியது. [உ-எ]

## சர்வசன வாக்கெடுப்பு ஒத்திவைக்க முடிவு!

### ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார்

கொழும்பு, ஜூன் 9

இணைப்புப் பற்றிய சர்வசன வாக்கெடுப்பை ஒத்திவைப்பது என்று இலங்கை அரசு முடிவு செய்துள்ளது.

இது குறித்த உத்தியோக பூர்வமான அறிவிப்பை ஜனாதிபதி சில தினங்களில் வெளியிடுவார் என்று வெளியுறவு

[ 8ஆம் பக்கம் பார்க்க]

## கோவில் வீதியில் ஒருவர் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணம், நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் சந்திக்கும் றக்கா ரோட் சந்திக்கும் இடையில் கோவில் வீதியில் நேற்று மாலை 6-40மணியளவில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். உயிரிழந்தவர் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த இ. தனபாலசிங்கம் (வயது 17) எனத் தெரிவிக்கப்பட்டது.

## பேர்னுட் திரும்பினார்

இலங்கை வெளியுறவுச்செயலாளர் பேர்னுட் திலகரத்தின கடந்த புதன்கிழமை இரவு கொழும்பு திரும்பினார்.

திரு. திலகரத்தின, அவர்கள் அமைதிப்படைவிலகல்சம்பந்தமாகபிரதமர் ராஜீவ்காந்தியைச் சந்தித்து கடந்த திங்கட்கிழமை பேச்சுக்களை நடத்தினார். (ஓ-எ)

## அழகான மொட்டை, தாடிக்கு கம் உதாவ பரிசு!

கொழும்பு, ஜூன் 9

இந்த ஆண்டு மஹியங்கனையில் நடைபெறவுள்ள கம் உதாவ கொண்டாட்டங்களின்போது புதுவிதமான போட்டி ஒன்று நடைபெறவுள்ளது:

★ நீண்ட அழகிய கூந்தலையுடைய பெண்.
★ அழகான தாடியுள்ள மனிதன்.
★ அழகான வழுக்கைத் தலையுடையவர் —

ஆகிய மூவர் இப்போட்டியின்போது தெரிவு செய்யப்படுவர்.

போட்டியில் கலந்துகொள்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை வருகிற மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பேச்சுக்களின் பெறுபேறுகளை பொறுத்தே அடுத்த நடவடிக்கை

### ஈரோஸ் பேச்சாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நடத்தும் பேச்சுக்களின் பெறுபேறுகளைப் பொறுத்துத்தான் நாம் இடைத்தேர்தலில் பங்கு பற்றுவது குறித்து தீர்மானிப்போம்.

உடனடியாக இடைத்தேர்தல் ஒன்று நடைபெற்றால் ஈழவர் ஜனநாயக முன்னணி அந்தத் தேர்தலில் நிற்பது பற்றி ஆலோசனை எதுவும் செய்யவில்லை என்றும், அப்படியான செய்திகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் ஈரோஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

எமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் இன்றுடன் காலியாகின்றன. தற்போதைய விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் இடைத் தேர்தல் என்ற முறையே இல்லை.

காலியாகும் இடங்களுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் இருந்து

(8ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் கலவரத்தினால் பாரதூரமான விளைவுகள்!

### பொலீஸ் மாஅதிபர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 9

இந்த நேரத்தில் மாணவர்கள் கலவரத்தில் ஈடுபடுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

— இவ்வாறு பொலீஸ் மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேரா நேற்று விடுத்த அறிவிப்பு ஒன்றில் தெரிவித்திருக்கிறார்:

அவர் மேலும் கூறியதாவது:-

தற்பொழுது நாட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் சேதம் விளைந்துள்ளது. பொலீஸார் வெள்ள நிவாரண நடவடிக்கையில் முழு மூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் நாட்டில் உள்ள மிகச் சிறிய குழுவினர் மாணவர்களின் உணர்ச்சிகளைத் தட்டிவிட்டு அவர்களை கலவரம் செய்யத் தூண்டுகிறார்கள்.

வடக்கு, கிழக்கில் இவ்வாறான சூழ்நிலை ஏற்பட்ட போதுதான் அமைதிப் படை அங்கு வர நேர்ந்தது: அந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை வாபஸ்:

# ஜனாதிபதி பிரேமாவின் கோரிக்கை வியப்புக்குரியதல்ல!

### பாலகுமார் உதயனுக்கு பேட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 9

இந்தியப்படை ஜூலை இறுதிக்குள் வெளியேற வேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா கோருவது வியப்புக்குரியதல்ல.

—இவ்வாறு ஈரோஸ் அமைப்பின் பிரமுகர் திரு. வே. பாலகுமார் நேற்று உதயனுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்:

திரு. பாலகுமார் மேலும் கூறியதாவது:-

இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது இரு நாடுகளுக்கு இடையிலேயே ஆகும்.

தமிழ் பேசும் மக்களை தனது படையினரால் கொன்று குவித்த ஜே. ஆர். அரசு ஒப்பந்தத்தின்படி இந்தியப் படையை இங்கு வரவழைத்தது.

சிங்களப் படையினரால் தமிழ் பேசும் மக்கள் அடையும் துன்பங்களைத் தடுப்பதற்காகவே இந்தியப்படை இங்கு வந்ததாகக் கூறப்பட்டது.

இந்தியப் படையினரை வரவழைத்த அதே இலங்கை அரசு, இந்தியப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதலை உருவாக்க வழி வகுத்தது.

பின்னர் எந்த விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைப் பறிப்பதற்காக இந்திய அரசை ஏவிவிட்டதோ, அதே விடுதலைப் புலிகளுடன், வெளி நிர்ப்பந்தங்களைத் தாங்க முடியாமல

(8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

09— 06 —1989
வைகாசி — 27
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
05.52 முதல் 07.22 வரை
ராகுகாலம்:
10.22 முதல் 11.52 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
ஷஷ்டி விரதம்

## மாங்குளத்திற்கு அப்பால் கண்ணிவெடிச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

நேற்று முன்தினம் மாலையில் மாங்குளத்திற்கும் வவுனியாவிற்கும் இடையில் பன்றிக்கெய்தகுளம் என்ற இடத்தில் கண்ணிவெடிச் சம்பவம்ஒன்று இடம்பெற்றது.

ரோந்து சென்ற படையினரின் 'ட்ரக்' ஒன்றும் ஜீப் ஒன்றும் இந்தத் தாக்குதலில் சேதமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழப்புகள் குறித்து உர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

சிறிது சேதமுற்ற ட்ரக் பின்னர் படையினரால் எடுத்துச் செல்லப்பட்டது.

ஜீப் முற்றாக சேதமடைந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக்குருமார்களின் பிள்ளைகள் மதிய உணவை ஏற்க முடியாது

## பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு மனு

யாழ்ப்பாணம், ஜூன் 9 "பாடசாலைகளில் மதிய உணவைச் சைவ சமய குருமார்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படுபோது அதை அவர்கள் ஏற்க முடியாமலிருக்கிறது. சமயக் கோட்பாடுகளின்படி சைவக் குருமார் மற்றவர்கள் சமைத்த உணவை உண்ண முடியாது. ஆகவே அவர்களுக்கு வழங்கும் உணவுக்கு உரிய பணத்தை வழங்க ஏற்ற நடவடிக்கையை எடுக்கவும்."

இலங்கை சைவக்குருமார், அர்ச்சகர் பேரவையின் உப-தலைவர் சிவஸ்ரீ சு. சிவசண்முகநாதக் குருக்கள், வவுனியா பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பழைய புத்தகங்கள் வாங்கப்படும் விற்கப்படும். Second Hand Book House 13/6, ஸ்ரான்லி வீதி, (முரசொலி, இலங்கை வங்கிக்கு முன், பட்டப்படிப்பு கல்லூரி லேன்) யாழ்ப்பாணம். (744)

7 மாதம் நிரம்பிய முட்டை இடும் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 117, சிவப்பிரகாசம் வீதி. யாழ்ப்பாணம். (11193)

நல்ல நிலையில் உள்ள A 40 EY மூன்று இலக்கமுடைய கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; சந்திரன், No 30/2 சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (750)

எல்லா வகையான உள்நாட்டு, வெளிநாட்டு லெட்டபாட் வகைகளும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன மலிவு விலை 8/50 இல் இருந்து எல்லா விலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம், புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி/2515)

### FOR SALE

புத்தம் புதிய வீடியோ கமெரா Panasonic S-VHS Movie N.V-MSI Hitachi VK-C870E J.V.CGZ-S5 ஆகிய மொடல்கள் விற்பனைக்கு உண்டு. கே.கே. எலக்ரோனிக்ஸ், 27, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/2812)

### தவறி விட்டது

சுப்பையா கனகநாயகம் ஆகிய எனது அடையாள அட்டையும் (542373377 V, சாரதி அனுமதிப்பத்திரமும் (017435) மல்லாகத்திற்கும் தெல்லிப்பழைக்கும் இடையில் K.K.S வீதியில் தவறி விட்டன. கண்டு எடுப்பவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (749)

கொக்குவில் பொற்பதி வீதியைச் சேர்ந்த நா. கதிரவேலு ஆகிய எனது அடையாள அட்டை இல 340550994 V தொலைந்து விட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11203)

பொன்னையா தில்லைநாதன் பூநகரி என்பவரது அடையாள அட்டை தவறி விட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11197)

### வாடகைக்கு

நன்கு வியாபாரம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் சகல வசதிகளுடனும் தளபாடங்களுடனும் உள்ள எமது தேநீர்சாலை வாடகைக்கு விடப்படும். தொடர்பு: R.R. சந்திரன், இல-2, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி. (11202)

### வகுப்பு

O/L படித்த மாணவர்களுக்கும் ஏனைய வகுப்பு மாணவர்களுக்கும் ஆங்கில வகுப்புகள் "ஸ்போக்கின்" உட்பட நடைபெறுகின்றன. தொடர்பு: க. நாகேந்திரம், 34/4 செட்டித்தெரு, நல்லூர். (748)

## கருத்தரங்குகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9 நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற இருந்த மெய்வல்லுநர் போட்டி விதிமுறைகள் பற்றிய கருத்தரங்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கல்வி அதிகாரி (உடற் பயிற்சி) திரு. த. அருணகிரிராஜா இதனைத் தெரிவித்தார்.

இது நடைபெறும் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும். (இ)

## மெய்வல்லுநர் போட்டி

கிளிநொச்சி. ஜூன் 9 கிளிநொச்சி கொத்தணி பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

கொத்தணி அதிபர் திரு. சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் கோட்டக்கல்வி அதிகாரி திரு. தனஞ்சயன் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வி அதிகாரி திரு. வேலாயுதம், விளையாட்டுக்கல்வி அதிகாரி திருமதி. சூரியமூர்த்தி விவசாய கல்வி அதிகாரி திரு. தருமரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான. விருதுகளை பிரதம விருந்தினர் வழங்கினர். (க-97)

## பரிசளிப்பு விழா

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியமும் போரூட் ஸ்தாபனமும் இணைந்து நடத்திய பேச்சுப்போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் டாக்டர் இ. சற்குருநாதன் தலைமையில் நடைபெறும். (இ)

## ஹாட்லி பழைய மாணவர்

வடமராட்சி, ஜூன் 9 பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக்கிளை 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பழைய மாணவர்களுக்கு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இராப்போசன விருந்து ஒன்றை அளிக்கிறது.

பழைய மாணவர் சங்கத் தலைவரும், யாழ். பல்கலைக்கழக உப வேந்தருமான பேராசிரியர் திரு. ஏ. துரைராஜா இராப்போசன விருந்துக்குத் தலைமை வகிப்பார். (ச)

## முஸ்லிம் லீக் யாழ். கிளை அனுதாபம்

யாழ்ப்பாணம், ஜூன் 9 மறைந்த ஈரானிய ஆத்மீகத் தலைவரும், இஸ்லாமியப் புரட்சியாளருமாகிய--ஆயத்துல்லா கொமெய்னி (நஹுல்லா) அவர்களின் மறைவுக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் (யாழ். கிளை) தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளது. (இ)

## கொடியேற்றம் இன்று

காங்கேசன்துறை, ஜூன் 9 காங்கேசன்துறை துர்க்கா பரமேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இரதோற்சவம் 22ஆம் திகதி வியாழக்கிழமையும் மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம்பெற உள்ளன.

உற்சவங்களை ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ. வை: முத்துக்குமாருக் குருக்கள் நடத்தி வைப்பார். (ச-68)

## பல்கலைக்கழகஊழியர் நன்றி

யாழ்ப்பாணம், ஜூன் 09 உயர்கல்வி அமைச்சருக்கும் மானியக்குழு அதிகாரிகளுக்கும் அனைத்து பல்கலைக்கழக ஊழியர் சம்மேளனப்பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது எமது 17 கோரிக்கைகளும் ஏற்கப்பட்டன. அதனை அடுத்து வேலைக்குத் திரும்புகிறோம்.

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு வழங்கிய அனைத்து தொழிற்சங்கங்களுக்கும் அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் அனைத்து பல்கலைக்கழக ஒன்றியங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம் என்று உள்ளது. [அ 3]

## கொழும்பில் நடந்த சாரணியர் போட்டி:

# திருக்குடும்ப கன்னியர் பாடசாலை மாணவி தனி நடனத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 9 சாரணியர் இயக்கத்தில் 11 வயதுக்கு உட்பட்ட பிரிவான சிறு தோழர் கூட்டங்களிடையே கொழும்பில் அகில இலங்கை ரீதியில் கடந்த 27 ஆம் திகதி நடத்தப்பட்ட தனி நடனப் போட்டியில் யாழ். திருக்குடும்ப கன்னியர் பாடசாலை சிறு தோழர் கூட்டத்தைச் சேர்ந்த கிளறிஞ ஐரீன் இம்மானுவேல் முதல் இடத்தைப் பெற்றார்.

கடந்த மாதம் 6 ஆம் திகதி யாழ். வேம்படி மகளிர் பாடசாலையில் இது தொடர்பான மாவட்ட ரீதியிலான போட்டிகள் நடைபெற்றன

அப்பொழுது மாவட்ட ரீதியில் தனி நடனப் போட்டியில் திருக்குடும்ப கன்னியர் பாடசாலை தெரிவாகி இருந்தது. குழு நடனப் போட்டியில் வண்டத்தரிப்பு மகளிர் பாடசாலை தெரிவாகி இருந்தது.

தற்போது கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியிலான போட்டியிலும் திருக்குடும்ப கன்னியர் பாடசாலை மாணவி கிளறிஞ ஐரீன் இம்மானுவேல் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். (இ-ச)

## கட்டட மேற்பார்வையாளர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம் ஜூன் 9 யாழ்- கல்வித்திணைக்களத்தில் கட்டட மேற்பார்வையாளர்கள் போதியளவு இல்லாததால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25 பேர் வேண்டிய இடத்தில் 10 பேர் மட்டுமே இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (இ- 3)

## பால் மா

குருநகர், ஜூன் 9 யாழ். - மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலையம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பங்குகளுக்கு ஊடாக நடைபெற்று வருகின்ற பாலர்பாடசாலை சிறுவர்களுக்கு பால்மா வழங்கி வருகிறது.

சத்துணவு இல்லாத பத்தாயிரத்து ஐந்நூறு சிறுவர்களுக்கு நாளாந்தம் 50கிறாம் பால் மா வழங்கப்பட்டு வருவதாக நடுநிலைய இயக்குநர் வண- பிதா எம். ஈ. பயஸ் அடிகளார் தெரிவித்தார். (க- 51)

## சித்திரத்தேர்

சாவகச்சேரி, ஜூன் 9 சாவகச்சேரி தாளையம்பதி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் சித்திரத்தேர் ஒன்று செய்யப்பட்டு பூர்த்தி அடையும் நிலையில் உள்ளது.

கொடிஸ்தம்பம் நிறுத்தப்படுவதற்கான வேலைகளும் ஆரம்பமாகி உள்ளன.

இந்த ஆலய வருடாந்த உற்சவங்கள் இம்மாதம் 23 ஆம் திகதி ஆரம்பமாகிதேர்த் திருவிழா 31 ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா ஜூலை 8 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ச-31)

## கொடியேற்றம்

சரவணை பள்ளம் புலம் முருகமூர்த்தி கோயில் கொடியேற்றம் நாளை சனிக்கிழமை பகல் 11மணிக்கு நடைபெறும்

தேர்த்திருவிழா 18ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கும் தீர்த்தோற்சவம் மறுநாள் திங்கட் கிழமைகாலை 9மணிக்கும் நடைபெறவுள்ளன.

திருக்கல்யாண விழா 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை 2மணி முதல் 7மணி வரை நடைபெறும். (ச)


## காணவில்லை

60 வயதுடைய நலைநரைத்த கட்டையான தோற்றமுடைய, பொதுநிறமுடைய வயோதிப புத்தி சுவாதீனமற்ற பெண்ணொருவரை 6-6-89 தொடக்கம் காணவில்லை. கடைசியாகபச்சைநிறச் சேலையும், வெள்ளைச் சட்டையும் அணிந்திருந்தார். கடைசியாகக் காணப்பட்ட இடங்கள் மந்திகை, வரணியாகும். அவரைக் கண்டவர்கள் தகவல்தரவேண்டிய முகவரி,

A. யோகானந்தா,
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(11206)

## வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு
## WORK OVERSEAS

தொழிலொன்றுடன் வெளிநாடு செல்லுங்கள். 30 நாடுகளில் 70 க்கு மேற்பட்ட பல்வேறு தொழில்கள் (Job Categories) உயர்தொழில் முதல் சிறுதொழில் வரை, 17 முதல் 50 வயதுவரை ஆண்களும் பெண்களும் கட்டணம் எதுவுமில்லை, நீங்களே உங்கள் வெளிநாட்டுத் தொழிலதிபருடன் தொடர்புகொண்டு உங்கள் வேலைவாய்ப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். விண்ணப்பப் பத்திரம் மற்றும் விபரங்கள் அடங்கிய வழிகாட்டியைப் பெற்றுக்கொள்ள முதலில் சுய விலாசமிட்ட ரூபா 4/25 முத்திரை ஒட்டிய நீண்ட தபாலுறை அனுப்புக. நேரில் வரவேண்டாம்.

Foreign Assignments.
Chunnakam. (886)

## PROFESSIONAL COMPUTER STUDIES

**Computer Courses**

1. WORD PROCESSING (Word Star 2000 +)
2. D BASE III Plus On I B M P C (Comp) Machine

Starting on: 17. 6. 1989

Contact Between 2 p.m. 6 p.m.

**R. KARTHIGESAN**
" Dwarakai "
Adiyapatham Road,
Thirunelvely East.
(Rajaveethy Junction)

(11204)

## PROFESSIONAL EXAMS

C. I. M. A. STAGE - 1
I. D. P. M. PART - 1
I. A. B. ALL STAGES

COMMENCEMENT 10-06-89

Lecturers:
JEYARATNAM, KATHIRGAMANATHAN, NAVARENDRAN, PUSHPA SIVAPATHASUNDARAM, THAVARATNASINGAM.

கடந்த கால பரீட்சைகளில் எமது மாணவர்களுள் 80 விகிதத்தினர் சித்தி பெற்றிருக்கின்றனர்.

JOIN THE LEADERS

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION,**
16. 3 rdCROSS STREET
[OLR தேவாலய மேற்குப் பக்கம்]
JAFFNA.

(C/2825)


# மதுபோதைத் தடுப்பு பிரசாரத்துக்கு கலை இலக்கியங்களைப் பயன்படுத்தலாம்

## பேராசிரியர் சிவத்தம்பி கூறுகின்றார்

ஆழமான மனித உறவுகளை ஆராயும் படைப்புகள் மதுபோதை தடுப்பதற்கு உதவலாம். மதுவுக்கு அடிமையாகி ஒருவனை வெறுமனே குடிக்காதே என்று சொல்வதால் பயன் எதுவுமில்லை. அவனுள் சென்று ஏன் குடிக்கிறான் என்பதை ஆராய்ந்து அதற்கான பரிகாரத்தை அவனுக்கு உணர்த்தினால் அவன் திருந்துவான்.

யாழ். தொடர் பகத்தில் இடம் பெற்ற மதுபோதைப் பொருள் தடுப்புக்கல்விக்கான ஆசிரியர் பயிற்சிக் கருத்தரங்கில் பேசுகையில் யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் க. சுகுமார் தலைமையில் இடம் பெற்ற இக் கருத்தரங்கில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

கலை, இலக்கியங்களை மதுபோதைத் தடுப்பு பிரசாரத்துக்குப் பயன் படுத்தலாம்.

கலைக்கு அப்பாலானவிடயங்களையும் கலை தன்னுள் அடக்கியுள்ளது. கலையால் வரும் தொடர்பு மற்றவற்றிலும் பார்க்க வித்தியாசமானது. எதனாலும்ஏற்படுத்தமுடியாத தாக்கத்தை கலை ஏற்படுத்தும். கலையின் தொடர்பு யாரையும் கவரக் கூடியது.

கலைக்கு பொருள் உண்டு. எந்தக் கலையாக இருந்தாலும் அதற்கு மனித உறவு, மனித பண்பாடு முக்கியம். மனித உறவுகள் ஆழமாக ஆராயப்பட்டு வெளிவரும் கலைப் படைப்புக்களேசமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும்.

அப்படி ஆழமாக மனித உறவுகளை ஆராயும் படைப்புக்கள் மதுபோதைத் தடுப்புக்கு உதவலாம்.

இப்படி அவர் கூறினார். (க-3)

## மண்டப திறப்புவிழா

சூராவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய இராஜ இராஜேஸ்வரி மண்டபத் திறப்பு விழா நாளை 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 7-00 மணிக்கு நடைபெறும்.

இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு சி. பாலச்சந்திரனின் தலைமையில் விழா நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. கே. நாகேஸ்வரன், திரு. சிவசண்முகவடிவேல், திரு. சி. சுஜமுகலிங்கம், திரு. சி. சண்முகலிங்கம் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறவுள்ளன.

நண்பகல் அன்னதானமும் மாலை 3-30 மணிக்கு [illegible] குழுவினரின் வில்லுப்பாட்டும் இடம் பெறும். [illegible]

# கணக்கீட்டு நியமனங்கள்பற்றிய தொடர் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9 இலங்கைப் பட்டையக் கணக்கறிஞர் கழகத்தின் கணக்கீட்டுநியமனங்கள் (S.L.A.S.) பற்றிய தொடர்க் கருத்தரங்கங்களை தொடர்ச்சியாக நடத்த தொழில் நுட்பக் கல்லூரி வணிகக் கல்வி அபிவிருத்தி மன்றம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது

(நாளை 10 ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு இலங்கைக் கணக்கீட்டு நியமம் இல 3, கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தல் ஆகியவை பற்றி திரு. கே. ஜெயரத்தினம் அறிவுரை வழங்குவார்.

இலங்கை கணக்கீட்டு நியமனம் இல 10, அசாதாரண முந்திய கால விபரங்களும் கணக்கீட்டு கொள்கைகளில் உள்ள மாற்றங்களும் பற்றி 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்குச் செல்வி வை. முருகேசு அறிவுரை வழங்குவார்.

இவ்விரு அறிவுரைகளையும் முறையே திருவாளர்கள் திரு. ரி. இராசரத்தினமும் கே. ஜெயரத்தினமும் அறிமுகம் செய்து வைப்பார்கள்.

அறிவுரைகள் கல்லூரியின் பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

கணக்கியல் பாடம் கற்கும் கற்பிக்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள். (ச)

## முருகமூர்த்தி கோயில் உற்சவம்

யாழ்ப்பாணம். ஜூன் 9 சங்கரத்தை கரந்தைக் குணவத்தை ஸ்ரீ முருகமூர்த்தி கோயிலின் அலங்கார உற்சவம் நேற்று 8ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பித்தது. 27ஆம் திகதி [illegible]

## பொங்கல் உற்சவம்

கோப்பாய், ஜூன் 9 அருள்மிகுசெருங்சஞ்சாட்டி அம்மன் கோயிலின் வருடாந்த பொங்கல் உற்சவம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். (இ-72)

## கும்பாபிஷேக தின உற்சவம்

கோப்பாய், ஜூன் 9 கோப்பாய் வடக்கு மகிழடி வைரவ ஆலயத்தின் வருடாந்த கும்பாபிஷேக தின உற்சவம் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. (இ-72)

## சிறப்பாக நடந்தது

ஒட்டுசுட்டான் ஜூன்9 புதூர் நாகதம்பிரான் கோயில் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கடந்த சில வருடங்களுக்கு பின்பு இவ்வருடம் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தரிசனம்செய்ய வந்திருந்தனர் (ஒ- 114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PERSONAL CLASSES**

B. M. C. முன்லேன்-யாழ்ப்பாணம்.

**A/L 90 புதிய பிரிவு**

ஆரம்பம்: 10 - 06 - 89

சனி காலை 8.30 மணி

8.30 a.m. Chemistry திரு. மதுரமணி B. Sc
- பௌதிக இரசாயனம்

9.30 a.m. Physics திரு. சத்தியசீலன் B. Sc
- வெப்பவியல்

10.30 a.m. Zoology திரு. ஈஸ்வரதாசன் B. Sc
- வன்கூடு

11.30 a.m Botany திரு. சர்வானந்தா B. Sc
- இயங்குதாவரம்

12.30 p.m. Pure & Applied Maths திரு. விஜயகுமார் B. Sc
- வரிசைமாற்றமும் சேர்மானமும்

- A/L 89 Paper Classes and Day Classes

A/L 91 Week end Classes நடைபெறுகின்றன.

[சி-2813]


# மட்டக்களப்பு - மன்னர் விவசாயிகளுக்கு விதை நெல்

## "கெயர் இன்ரநஷனல்" நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஜூன் 9

மட்டக்களப்பு, மன்னார் மாவட்டத்தில் உள்ள 112 விவசாயிகளுக்கு விதைநெல் வழங்கும் திட்டம் ஒன்றை ஆறு லட்சம் ரூபா செலவில் கெயர் இன்ரநஷனல் அமைப்பு நடைமுறைப்படுத்த இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பழுகாமம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 56 விவசாயிகளுக்கு தலா ஒன்பதாயிரம் ரூபா வீதம் விதை நெல்லும், பணமும் வழங்கப்பட்டுள்ளது. ஜூலை மகா கால போகத்துக்காக இவ்வுதவி வழங்கப்படுகிறது.

இதே போல் மன்னர் மாவட்டத்திலும் 56 விவசாயிகளுக்கு விதை நெல் திட்டத்தை நடைமுறைப்படுத்த இவ்வமைப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (இ- 3)

## சாரணர் பயிற்சி

கொடிகாமம், ஜூன் 9

சாரணர் தலைவர்களுக்குரிய முன்னேடிப் பயிற்சி மஹாரகம மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது, இலங்கை முழுவதிலுமிருந்து 36 பயிற்சியாளர்கள் கலந்துகொண்டனர்.

பளை மகா வித்தியாலயத்தில் இருந்து குழுச் சாரணர் தலைவர் திரு. மா. புவனேந்திரன், சாரண போதனாசிரியர்கள் திருவாளர்கள் பி. விக்னேஸ்வரன், பொ. அன்ரன் ஜெயராட், என். நற்குணம் ஆகிய நான்கு பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். (க-75)


ஓம்

**திருமண அழைப்பிதழ்**

அன்புடையீர்!

நிகழும் சுக்கில ஆண்டு வைகாசி மீ 28 ஆம் திகதி (10 - 06 - 1989) சனிக்கிழமை காலை 10. 33 முதல் 12. 18 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எங்கள் புதல்வன் திருநிறை செல்வன் **தயாளன்** B. Sc. Hon Eng) (உதவி உற்பத்தி முகாமையாளர் ரோக்கியோ சீமெந்து கொம்பனி (லங்கா) லிமிட்டெட் திருகோணமலை அவர்களுக்கும்

எங்கள் புதல்வி திருநிறை செல்வி **சுமதி** (கணக்காளர் சர்வோதயம் திருகோணமலை) அவர்களுக்கும்

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1989 - 06 - 19 இல் மணமகன் இல்லத்தில் கொண்டாட்டம் மதியம் 12. 00 மணி முதல் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. நா. துரைசாமி (Retired. Tech. Officer Met. Dept.)
திருமதி நா. துரைசாமி,
'ஸ்ரீ ஜெயா'
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி மு.கோ. சங்கரதாஸ்,
16, கஸ்கிசன் வீதி,
திருகோணமலை.

(1119)



உ

**திறப்பு விழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் வைகாசி மாதம் 28 ஆம் நாள் 10 - 06 - 89 சனிக்கிழமை பகல் 10. 30 மணிமுதல் 11 - 30 மணி வரை வரும் சுபமுகூர்த்த நல் வேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**சங்கர் வைத்தியசாலை**

எனும் ஸ்தாபனத்தை வைத்திய கலாநிதி திரு. அ. கிருஷ்ணசாமி அவர்களாலும்

**சிவா ஸ்ரோர்ஸ்**

எனும் ஸ்தாபனத்தை விக்னேஸ் ரெக்ஸ் உரிமையாளர் திரு. சிவநேசலிங்கம் (ஈசன்) அவர்களாலும் திறந்து வைக்கப்படவுள்ளதால் அத்தருணம் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்.

இங்ஙனம்,

தங்கள் நல்வரவை நாடும்.

திரு. திருமதி S. பாலசுப்பிரமணியம், (பாலா)
Dr. B. பிறேமா.

சங்கர் டிஸ்பென்சரி,
ஐயனார் கோவில் லேன்,
பலாலி ரோட்,
புன்னாலைக் கட்டுவன் வடக்கு,
சுன்னாகம்.

(C/2693)



# "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

**நிலையான முதலீட்டுத் திட்டம்**

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15 % |
| 6 மாதங்கள் | 15 % | 17 % |
| 12 மாதங்கள் | 18 % | 20 % |
| 24 மாதங்கள் | 21 % | 23 % |
| 36 — | 22 % | 24 % |

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 8,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,388,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,385 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,618 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,882 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | 6 |

**நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நாடுங்கள்**

**நிதித்துறையில் உங்கள் நண்பன், அவனே!**

பணிப்பாளர் சபை

திரு. எல். ஈ. கருணாரத்ன, சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம், (A. I. B. Lond.), பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம் (A. I. B. Lond.), முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி (B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய டிப்ளோமா பயிற்சி முடிவுகள்

மருதனமடத்தில் உள்ள யாழ்ப்பாண கல்லூரி விவசாய நிறுவனத்திஞல் நடத்தப்பட்ட 1988 – 89ஆம் ஆண்டுக்கான விவசாய டிப்ளோமா பரீட்சையில் சித்தி அடைந்தோர் விவரம் வருமாறு:

முதலாம் வகுப்பு;- கே. குகனேசன், மீசாலை.

இரண்டாம் வகுப்பு மேற்பிரிவு:- எஸ். சிவாகரன் - அளவெட்டி, ரி. திருச்செல்வம் - அளவெட்டி, எஸ். யோகராணி - சுதுமலை, ஆர். ராஜினி - கரம்பொன், கே. சிவனேசன் - யாழ்ப்பாணம், ரி. தற்பரன் - வட்டுக்கோட்டை.

இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவு:- பி முரளிதரன் - கந்தர்மடம், எம். பரணன் - வட்டுக்கோட்டை, எஸ். நந்திகா திலகேஸ்வரி-சுழிபுரம், ஏ. நளினு - நல்லூர், ஆர். கெங்காதரன் - கொக்குவில், என். கோணேஸ்வரன் - தெல்லிப்பழை.

சாதாரண வகுப்பு:- எஸ். புஸ்பகாந்தி - கல்வியங்காடு. ஆர். நித்தியகுமார்- மானிப்பாய். (க)

# கப்பலில் திருமலை வரும் இந்தியப் பொருள்கள்

இந்திய அரசு வழங்கும் உதவிப்பொருள்களின் மூன்ருவது தொகுதியை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று இம்மாதம் 15 ஆம் திகதி திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடையும்.

இக்கப்பலில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் வருகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு அச்சகம் ஒன்றை அமைக்கும் பொருட்டு அச்சகத்திற்குரிய சாதனங்களும், இயந்திரங்களும், மாணவர்சீருடைக்குத் தேவையான துணிமணிகள் மற்றும் ஜெனரேட்டர், தொலைபேசித் தொடர்பு சாதனங்களும் இக்கப்பலில் வந்துசேரவுள்ளன. (உ-எ)

## முன்சேவைப் பயிற்சி முடித்தும்

# நியமனம் பெருதோர் உடன் தொடர்பு கொள்க!

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை முன் சேவைக் காலப் பயிற்சி முடிந்த பின்னரும் நியமனம் பெருதவர்களை உடனடியாக யாழ் கல்வித் திணைக்களத்துக்கு வருமாறு கோரப்பட்டுள்ளது.

இவர்கள் பொது நிர்வாக நிலையத்திற்குப் பொறுப்பான யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசாவைச் சந்திக்குமாறு கோரப்பட்டுள்ளது. [உ-3]

# நாதஸ்வரக் கலையை அழியவிட்டால் எமது பாரம்பரியம் அற்றுப்போகும்

## பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 09

'நாதஸ்வரக்கலை, எமது கலைகளுக்குள் முதன்மையானது. இக் கலையை அழியவிட்டால் எமது பாரம்பரியமே அற்றுப் போகும்.'

அராலி முத்துமாரி அம்மன் கோயிலில் நடைபெற்ற கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்களின் பாராட்டு விழாவில் உரையாற்றும் போது நவாலியூர் நா. சச்சிதானந்தன் மேற்கண்டவாறு கூறிஞர்.

விழாவுக்கு அராலியூர் சுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார்.

திரு. சச்சிதானநதன் கூறியதாவது 'பணத்துக்காகவோ புகழுக்காகவோ நாதஸ்வரக் கலைஞர்கள் சாஸ்திரீய இசையைக்கைவிட்டு மெல்லிசைக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. மெல்லிசைக்கு முக்கியத்வம் கொடுத்து இளைஞர்களின் விசிறியாகத் திகழ்பவர்களின் செல்வாக்கு அதிக காலம் நீடிப்பதில்லை என்பதை நாதஸ்வரக் கலைஞர்கள் மனதில் அமர்த்திக் கொள்ள வேண்டும்.'

இப்படி அவர் கூறிஞர்.

கிராம சேவகர் திரு. சந்திரசேகரம், முன்னுள் கிராம சேவையாளர் திரு. ஒப்பிலாமணி ஆகியோரும் கானமூர்த்தி பஞ்சமூர்த்தி சகோதரர்களின் திறமையைப் பாராட்டிப்பேசினர்.

திரு. சுப்பிரமணியம் வாழ்த்துப்பா பாடிஞர்.

கலைஞர்களுக்குத் தேவஸ்தானபரிபாலன சபையினர் நாதஸ்வரம் பொறித்த விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர். (ச)

# அட்டன் சுப்பிரமணியர் கோவில் புனரமைப்பு வேலைகள் துரிதம்

நுவரெலிய, ஜூன் 9

அட்டன் அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கோயில் புனரமைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

பழுதடைந்திருந்த மூலஸ்தான பண்டிகைகள் புதிதாக அமைக்கப்பட்டு சிற்ப வேலைகள் நடைபெற்றுள்ளன விநாயகருக்கு புதிதாக தனிக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலில் புதிதாக மஹாவிஷ்ணு சிலை பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது. கோயிலின் கூரைகள் 40 ஆண்டுகள் பழைமை வாய்ந்தவையாக இருப்பதஞல் புதிய கூரை வேலைகள் நடைபெற்று வருகின்றன.

புனரமைப்பிற்கு சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவு ஏற்படு என்று கோயிலின் ஆதீனகர்த்தா பிரம்ம ஸ்ரீ நா. நாராயணசர்மா தெரிவிக்கின்ருர். (க-58)

## மாகாணசபை உறுப்பினர் கொல்லப்பட்டார்

கொழும்பு, ஜூன் 9

மேற்கு மாகாண சபையில் ஐக்கிய சோஷலிச அணியின் சார்பில் உறுப்பினராக இருந்த திரு. ஐவன் ஜெயசேகரவும் அவரது கார்ச் சாரதியும் கடந்த ஞாயிறு இரவு இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் இருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் பமுனுவ - மகரகம வீதியில் இத்தாக்குதல் இடம்பெற்றது. மாகாணசபை உறுப்பினருக்குப் பாதுகாப்பாக வந்த மூன்று தேசிய துணைப்படை வீரர்கள் காயமடைந்தனர். (உ-எ)


**A/L 89 ● சடப் பொருளியல் ●**

By. Raveendranathan B. Sc.

ஆரம்பம்: 10 - 6 - 89

Sat, Sun 11. 45 — 12. 45 p. m.

3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(C/2822)


## கிளிநொச்சி மாவட்டத்தில்

# 43 நிலையங்களில் இன்று 2ஆம் சுற்று தடை மருந்து

யாழ்ப்பாணம் ஜூன் 09

கிளிநொச்சி மாவட்டத்தில் காசநோய், குக்கல், ஏற்பு தொண்டைக் கரப்பான் இளம்பிள்ளை வாதம், சின்னமுத்து ஆகிய நோய்களுக்கு எதிரான இரண்டாம் சுற்று தடை மருந்து இன்று 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிமுதல் 43 மத்திய நிலையங்களில் வழங்கப்படவுள்ளது.

ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அண்மையில் உள்ள நிலையத்துக்கு கூட்டிச் சென்று இரண்டாம் சுற்று தடுப்பு மருந்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் திரு. கே. கனகசபை வேண்டியுள்ளார்.

முதலாம் சுற்று தடை மருந்து ஏற்கனவே ஏற்றப்பட்டது தெரிந்ததே (ச)

# யாழ் தொலைக்கல்வி ஆசிரியரின் இடை நிலைக்கல்விப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ். தொலைக் கல்வி ஆசிரியர்களின் (87—89) இறுதி இடைநிலைக் கல்வி பரீட்சைகள் நாளையும், நாளை மறுதினமும் (சனி - ஞாயிறு) வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

முதல் நாளான நாளை சனிக்கிழமை "கல்வி உளவியலும் கல்வித் தத்துவமும்," "கணித எண்ணக் கருக்கள்" "கணிதம்" (கணித விஞ்ஞானப்பிரிவு) தமிழ் மொழி (பொது)" "சுகாதாரமும் உடல்நலக் கல்வியும்," ஆகிய துறைகளில் பரீட்சை நடைபெறும்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக்கிழமை சூழல் விஞ்ஞானம் (ஆரம்ப நெறி), விஞ்ஞானம், (விஞ்ஞான நெறி), சமயம் இந்து. கிறிஸ்தவம் ரோ. க. இஸ்லாம்), மொழி எண்ணக்கரு, அழகியலும் ஆக்க தொழிற்பாடுகளும் ஆகிய துறைகளில் பரீட்சை நடைபெறும்.

பரீட்சை எழுதுவதற்கான உபகரணங்களை கொண்டுவருமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

# மக்கள் முகம்

## பட்டம்பெற்ருர்



யாழ்ப்பாணம், ஜூன் 9

சுன்னுகம் உடுவில் மகளிர் கல்லூரியின் ஆசிரியை ஒருவர் லண்டன் சர்வதேசிய கணக்கியலாளர் சங்கத்தின் உறுப்பினர் (Fellows shipd of the International Association of Bookkeepers London) என்ற பட்டத்தைப் பெற்றுள்ளார்.

கொம்பியூட்டர் விஞ்ஞானத்தில் தரவு பகுப்பாய்தல், திட்டமிடலில் (Data Processing and Programming) டிப்ளோமா பட்டம்பெற்ற இவரைத் தமது சங்கத்தில் உறுப்பினராகும்படி லண்டன் நிதிக் கணக்காளர்களின் சங்கமும் அழைத்திருக்கிறது.

செல்வி ஐயந்தா யோகரஞ்சினி சோமநாதர் என்பவரே இந்தப் பட்டத்தைப் பெற்றவர் ஆவார்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரியின் பழையமாணவியான இவர் உரும்பராய் என். ரி. என். சோமநாதர் தம்பதிகளின் புதல்வி ஆவார். (க)

## குடிதண்ணீர் விநியோக ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ். மாநகர சபை குடிதண்ணீர் விநியோகப் பகுதி ஊழியர் தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது.

தொழிற்சங்க நிர்வாக சபைத் தலைவராக திரு. கா. நடேசன், செயலாளராக திரு. செ. செல்வரத்தினம், பொருளாளராக திரு. சி விக்னேஸ்வரன் ஆகியோர் தெரிவாகினர்

மேலும் எட்டு உறுப்பினரைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ)

## இந்து இளைஞர் பேரவை

யாழ்ப்பாணம் ஜூன் 9

அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைவராக கல்முனை இந்து பேரவையைச் சேர்ந்த திரு. வ. முருகப்பன் தெரிவு செய்யப்பட்டார்

கலாநிதி மோகனதாஸ் தலைமையில் நடந்த பேரவையின் வருடாந்தக் கூட்டத்தில் கீழ்க்காணும்போர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவாஞர்கள்

உபதலைவர்கள்; எஸ் தனபாலன் (யாழ்ப்பாணம்), எஸ் சுந்தரலிங்கம் (திருமலை), எஸ் கணபதிப்பிள்ளை (வவுனியா), செயலாளர் அ. தில்லைநாதன் [யாழ்ப்பாணம்), துணைச் செயலாளர் செ. சிவபாதசுந்தரம் )திருமலை, பொருளாளர் இ. தவகோபால். (க-3)

## ஹாட்லிக்கு ஸ்தாபனங்கள் உதவி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் திருத்த வேலைகளுக்கு பொதுஸ்தாபனங்கள் பலவும் உதவ முன்வந்துள்ளன.

திருத்த வேலைகளுக்கென 'போருட்' ஸ்தாபனம் 25 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளது.

மேலும் கல்லூரியின் விளையாட்டு அரங்கைச் சீர்திருத்த சர்வோதய ஸ்தாபனம் முன்வந்துள்ளது. (ஒ-160)

## தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், ஜூன் 9

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் தமிழ்த் தின விழா கல்லூரி அதிபர் திருமதி ச. கல்யாணசுந்தரேசன் தலைமையில் நடைபெற்றது.

மாணவிகளின் கவிதைப் போட்டிகளும் பட்டிமன்றமும் இடம்பெற்றன. (ச)


# சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் "அர்ச்சுனு" - ஏப்ரல் இதழ்




● மாத இதழ் ரூபா 4 00 ● ஆண்டுச் சந்தா ரூபா 55. 00

காசோலை அல்லது காசுக்கட்டளை "நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்" என்று எழுதப்பட்டு அர்ச்சுனு, த. பெ. எண் 23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

[ஜ-2804]


## இலங்கை விவகாரம்:

# அமெரிக்க கொள்கையில் மாற்றம் எதுவும் இல்லை

கொழும்பு, ஜூன் 9

இலங்கை விவகாரங்களில் இந்தியத் தலையிடு சம்பந்தமாக அமெரிக்கா இதுவரை கடைப்பிடித்துவந்த கொள்கையில் மாற்றம் ஏதும் இல்லை.

டெக்ஸாஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ரொபர்ட் எல் ஹார்ட்கிரேவ் முன் கண்ட தகவலை வெளியிட்டார்.

கண்டியில் உள்ள அமெரிக்க நிலையத்தில் 'புஷ்ஷின் தலைமைத்துவம்' என்ற தலைப்பில் பேராசிரியர் ஹார்ட்கிரேவ் பேசிஞர்.

புதிய ஜனதிபதிகள் பதவியேற்றதை அடுத்து வரும் நூறு தினங்களில் புதியகொள்கைகளை அறிவிப்பது வழக்கம். அதன்மூலம் வெளிநாட்டுக்கொள்கையில் தனது தனித்தன்மையை புதிய அதிபர் நிலைநாட்ட முயல்வார். ஆஞல் அதிபர் புஷ் இதற்கு மாறுபட்டவராயிருக்கிருர்.

முந்திய அதிபரின் கொள்கையையே திரு புஷ் நிதானமாகக் கடைப்பிடித்து வருகிருர்.

இவ்வாறு அமெரிக்கப் பேராசிரியர் சொன்ஞர். (இ-எ)

# மேலதிக வேலை செய்யும் ஊழியர்களுக்கான புது நடை முறை

## அரச அலுவலகங்களில் அமுல்

கொழும்பு ஜூன் 9

அரச அலுவலகங்களில் மேலதிக வேலை செய்யும் ஊழியர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடமுள்ள பதிவேடுகளிலும் தாம் வேலைக்கு வரும் நேரத்தையும் வேலை முடிந்து புறப்படும் நேரத்தையும் பதிவு செய்யும் முறை தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இந்த நடைமுறை விரைவில் அமுல் நடத்தப்படவிருப்பதாக உதயனில் ஏற்கனவே செய்தி வெளியாகி இருந்தது தெரிந்ததே.

தற்பொழுது பஞ்சாட் முறையை அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஆகியவற்றிலும் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (இ-7)

## சலுசலா விற்பனை நிலையம்

அம்பாறை, ஜூன் 9

கல்முனை பஸார் பகுதியில் சலுசல ஸ்தாபனத்தின் சில்லறை விற்பனை நிலையமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக கப்பல் துறை அமைச்சர் ஜனப் ஏ. ஆர். மன்சூரின் பணிப்பின் பேரில் இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது. (க-14)

## மட்டுவிலில் ஜவான் பலி

சாவகச்சேரி, ஜூன் 9

மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற கிரனேற் வீச்சில் ஜவான் ஒருவர் பலியாஞர் என அறியப்படுகிறது.

படையினர் திருப்பிச்சுட்டதில் பாலன் என்பவர் மரணமாஞர் இவர் மட்டுவிலைச் சேர்ந்தவர்.

இச்சம்பவங்கள் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றன.

இச்சம்பவங்களை அடுத்து வீதிகள் வெறிச்சோடின. கடைகள் மூடப்பட்டன.

தொடர்ந்து செவ்வாய்க்கிழமை வரை இப்பகுதியில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ஒ-31)


**Engineering Council Examination**

Part I (London) May 1990

Weekend classes for the new batch of students will commence on Saturday 10th June at 9-00 a.m. Limited vacancies. Rush to ensure your place.

**WESTINGHOUSE**

Institute of Technology

57, Hospital Road,

(Koddady Junction,)

[883] JAFFNA.


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சின்னப்பு அமிர்தலிங்கம்**

தோற்றம்: 28 - 12 - 1926

மறைவு: 02 - 06 - 1987

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

மனைவி, பிள்ளைகள், மருமகன்.

குரும்பசிட்டி தெற்கு, தெல்லிப்பளை.

(884)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் தமிழ்ப் பாட நூல்கள் மொழிஆர்வத்தை வளர்க்க வேண்டும்

## இன்றைய நூல்கள் மலைப்பையே ஏற்படுத்துகின்றன

### யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி ஜெபநேசன் கூறுகிறார்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நாடறிந்த, உலகறிந்த கல்வி நிறுவனம். 1823 ஆம் ஆண்டில் டானியல் பூவர் என்ற அமெரிக்க மிஷனரியால் நிறுவப்பட்ட வட்டுக்கோட்டை செமினறியின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமே இன்றைய யாழ்ப்பாணக் கல்லூரியாகும்.

150 ஆண்டுகளைத் தாண்டியுள்ள இந்தப் பழம்பெரும் கல்வி நிறுவனத்தின் இன்றைய அதிபர் கலாநிதி ஜெபநேசனைக் கண்டு உரையாடி பேட்டி எடுக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

இவருக்கு முன் 20 ஆண்டுகாலமாக அதிபராக இருந்த திரு. ஏ. கதிர்காமர் கடந்த ஆண்டு ஓய்வு பெற கலாநிதி ஜெபநேசன் அந்த இடத்தை எடுத்துள்ளார். அதிபர்பதவியில் சில மாதகாலங்கள் தான் இருந்துள்ளார் என்ற போதிலும் கல்லூரி விஷயங்கள் பற்றி அறிவாற்றலும் அனுபவமும் இணைந்த முறையில் அவர் எம்மிடம் எடுத்துக் கூறினார்.

தென் ஆசியாவிலேயே முதல் பல்கலைக் கழக கல்லூரியாக முன்னர் விளங்கிய யாழ்ப்பாணக் கல்லூரியின் இன்றைய நிலைமை, அதன் வளர்ச்சிக்கான எதிர்காலத் திட்டங்கள் ஆகியன பற்றிய அவருடனை கலந்துரையாடலை கேள்வி — பதில் வடிவில் தருகின்றோம்.

★ கேள்வி: யாழ்ப்பாணக் கல்லூரியில் தற்போதைய நிலைமை பற்றிக் கூற முடியுமா?

★ பதில்: யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு காலகட்டத்தில் தென் ஆசியாவிலேயே கல்விக்கு முக்கியமான பங்களிப்பைச் செய்து வந்தது. இன்று அரசியல், சமுதாய மாற்றங்களினால் ஒரு சாதாரண உயர்தரப்பாடசாலையாக இயங்கி வருகின்றது. 1960 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தில் கல்விமான்களின் தொகை குறைவாக இருந்தது. இப்பொழுது விஞ்ஞானம், கணிதம் என்பவற்றைத் துறைபோகக் கற்றவர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர். அன்று சில பனை மரங்கள், இன்றொரு பனங்கூடல்.

ஒழுக்கம், கட்டுப்பாடு. எழுத்தார்வம், பன்மொழி அறிவு, பரீட்சைகளுக்கு விசேட பயிற்சிகள் என்பனவற்றில் விசேட கவனம் செலுத்துவதினாலேயே யாழ்ப்பாணக் கல்லூரி தனது தனித்துவத்தைக் காப்பாற்ற முடியும். எமது சென்ற வருட (1988) க. பொ. த. (உயர் தரம்) முடிவுகள் நம்பிக்கை அளிப்பனவாக இருக்கின்றன.

★ கேள்வி: இராணுவத்தினர் பிக்னெல் விளையாட்டு மைதானத்தில் தங்கி இருப்பதால் தங்கள் கல்லூரியின் விளையாட்டுத்துறை எந்தஅளவிற்குப் பாதிக்கப்படுகிறது?

★ பதில்: இராணுவத்தினர் ஒரு கட்டத்தில் விளையாட்டுமைதானத்தில் மட்டுமன்றி, வகுப்பறைகளிலும், வீடுகளிலும் தங்கியிருந்தனர். இப்பொழுது விளையாட்டு மைதானத்தில் முகாமிட்டுள்ளனர். விளையாட்டுப் பயிற்சிகளும் போட்டிகளும் கல்லூரிக்குள்ளே இருக்கும் பிறவுண் மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. விரைவில் பிக்னெல் மைதானத்தை எமக்குக் கையளிப்பார்கள் என்று நம்புகின்றோம்.



★ கேள்வி: தென்கிழக்காசியாவிலேயே மிகப் பெரிய கல்லூரி நூல்நிலையம் என்று புகழ்பெற்றிருந்த யாழ்ப்பாணக் கல்லூரி நூல்நிலையத்தின் இன்றைய நிலைமை யாது?

★ பதில்: எமது நூலகத்தில் இப்பொழுது முப்பதாயிரம் புத்தகங்கள் இருக்கின்றன. வருடம் எழுபது ஆயிரம் ரூபா நூல் நிலையத்துக்காகச் செலவிடப்படுகின்றது. கிறிஸ்தவ மிஷன் செயற்பாடு பற்றிய ஆய்வுக்கு எம்மிடம் வேண்டிய நூல்களும் ஆவணங்களும் இருக்கின்றன. யாழ்ப்பாண வரலாறு, புவியியல் என்பவற்றிலும் கூடிய கவனம் செலுத்தி வருகின்றோம். கிறிஸ்தவமிஷன், பத்தொன்பதாம் நூற்றுண்டு தமிழ் நூல் வளர்ச்சி என்பவற்றை ஆய்வுசெய்ய இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ஆய்வாளர்கள் வருகின்றனர். சென்றவருடம் கலாநிதி எஸ். பாக்கியநாதனின் உதவியுடன் நூல்களை ஒழுங்குபடுத்தியுள்ளோம். நூலகத்தை கம்பியூட்டர் மயமாக்கவும் ஓர் ஆய்வு நடத்துனரை (Research Assistant) ஆசிரியர் குழுவில் நியமிக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

★ கேள்வி: மாணவர்களிடம் பாடசாலைகள் நன்கொடை பெறுவது ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கின்றது. நன்கொடை பற்றியும் தங்கள் கல்லூரியின் நிதி வசதிபற்றியும் கூற விரும்புகிறீர்களா?

★ பதில்: யாழ்ப்பாணக் கல்லூரி ஒரு தனியார் பாடசாலை. நாம் இலங்கை அரசிடமிருந்து ஆசிரியர்களுக்கான சம்பளப் பணத்தைப் பெறுவதில்லை. யாழ்ப்பாணக் கல்லூரியை ஆரம்பித்தவர்கள் அதனைச் சுதந்திரமாக நடத்துவதற்கென ஒரு நிதியத்தை ஆரம்பித்தனர். இது அமெரிக்காவில் உள்ளது. இதிலிருந்துவரும் வட்டிப் பணம் ஆசிரியர் சம்பளமாக வழங்கப்படுகிறது. ஆனால் இப்பணம் ஆசிரியர் யாவருக்கும் சம்பளம் வழங்குவதற்குப் போதுமானதாக இல்லை. விடுதிச்சாலை, நூலகம், விளையாட்டுத்துறை என்பவற்றுக்கும் நாம் பெருந்தொகையான பணத்தைத் தேடவேண்டியவர்களாக இருக்கின்றோம். இதனாலேதான் பெற்றோரிடமிருந்து நன்கொடை பெறப்படுகின்றது. எனினும் இலங்கையில் மிகக்குறைந்த அளவு பணத்தை வசூலிக்கும் தனியார்பாடசாலை யாழ்ப்பாணக் கல்லூரிதான்.

ஒரு சிறந்த பாடசாலை எனின் அதில் அறுநூறு மாணவர்கள் தான் படிக்க வேண்டும் என்று முதுபெரும் கல்லூரி அதிபரும் சிறந்த நிர்வாகியுமான திரு. கே. பூரணம்பிள்ளை கூறுவர். ஆனால் இத்தகைய தொகையை வைத்திருக்க கல்லூரியின் நிதிநிலைமை இடமளிக்காது. இன்று நமது கல்லூரியில் ஏறத்தாழ ஆயிரத்து நானூறு பிள்ளைகள் படிக்கின்றனர். பழைய மாணவர்கள், பரோபகாரிகள் உதவியினால் பல மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

★ கேள்வி: ஒரு பாடசாலை அதிபர் என்ற முறையிலும் ஒரு கல்விமான் என்ற முறையிலும் தற்போதைய பாடநூல்களைப் பற்றிய தங்கள் கருத்தைக் கூறுவீர்களா?

★பதில்: இன்றுள்ள பாடநூல்கள் மிகவும் உயர்ந்த தரத்தின. நான் கற்கும் காலத்தில் இப்படியான நூல்கள் இருக்கவில்லையே என்று நான் ஏங்குகின்றேன்.

ஆனால் தமிழ்ப் பாடத்துக்கான நூல்கள் மலைப்பை ஏற்படுத்துகின்றன. தமிழ் நூல்கள் தமிழில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். பத்தாம், பதினேராம் வகுப்புப் பாடங்கள் சினத்தை ஏற்படுத்துகின்றன. ஏ. எல். (A/L) வகுப்பு இலக்கணம் [illegible] தாம் வகுப்பு [illegible] ட எவ்வளவோ எளிதாக இருக்கின்றதே! இலக்கணம் மூலமாக மொழியைக் கற்பிக்கும் வழக்கத்தை ஆங்கிலேயர் விட்டு விட்டார்கள் என்று எண்ணுகின்றேன். தமிழாசிரியர்கள் பற்றுக் குறையாக இருக்கும் இக்காலத்தில் மாணவன் மீது ஏன் இந்தச் சுமை?



கலாநிதி எஸ். ஜெபநேசன்

★ கேள்வி: பல எழுத்தாளர்கள், பத்திரிகையாசிரியர்கள், பத்திரிகையாளர்களை உருவாக்கிய பெருமை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு உண்டு. இன்றும் அந்தப் பணி தொடர்கின்றதா?

★ பதில்: 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை' சி. வை. தாமோதரம்பிள்ளை தொடக்கம் பாவலர் துரையப்பாபிள்ளை வரை நமது பரம்பரையினரே. இன்று விடுதிச்சுடர்', தமிழ் அருவி' என்ற கையெழுத்துப் பிரதிகளையும், 'இளஞாயிறு' எனும் அச்சடிக்கப்படும் தவணைப் பத்திரிகையையும் மாணவர்கள் நடத்தி வருகின்றனர். 'இள ஞாயிறு' 54 வருடகாலமாக நடைபெற்று வருகின்றது. வருடந்தோறும் தக்க முறையில் கவிஞர் பாரதிக்கும் அண்ணல் காந்தியடிகளுக்கும் விழா எடுக்கின்றோம். சிறுகதைப் போட்டிகளும், நாடகப் போட்டிகளும் ஒழுங்காக நடத்துகின்றோம். நமது மாணவன் சு. சர்வானந்தர் கடைசியாக நடைபெற்ற அகில இலங்கைப் பேச்சுப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் முதற் பரிசு பெற்றுர். நமது மேலைத்தேய பாண்ட் குழுவும் கீழைத்தேய இசைத் துறையும் நடனத் துறையும் இயங்குகின்றன. இவற்றுக்காக நாம் அதிக பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

★ கேள்வி: இறுதியாக, தமிழ் இளைஞர் கல்வியின் எதிர்காலம் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

★ பதில்: தமிழ் இளைஞர்கள் புத்தகப் படிப்புடன் உள்ள வளர்ச்சியையும் தேக ஆரோக்கியத்தையும் கவனிக்க வேண்டும் இன்று பல்கலைக்கழக அனுமதியில்உள்ள கடும் போட்டியினால் நொடிக்குள் மாறிவிடும் வாலிபம் ரியூட்டரிகளில் சிறைப்பட்டிருக்கிறது. எமது வாலிபப் பராயத்தில் எத்தனை கனவுகள், இலட்சியங்கள், உறுதிகள், சபதங்கள்! இன்று அல்லும் பகலும் பல்கலைக்கழக வாயிலையே நினைத்து தன்னைக் கசக்கிப் பிழிகின்றுன் மாணவன். இதற்கு அவனையோ பெற்றோரையோ குற்றங் கூறல் ஆகாது. உயர்கல்வி வளர்ச்சிக்கான வசதிகள், கல்வி மேல் தணியாத தாகம் கொண்டிருக்கும் எமது பிள்ளைகளுக்குப் பற்றாக்குறையாக இருப்பதே இந்த அவலநிலைக்குக் காரணம். உயர் கல்வி, தக்கமுறையில் விரும்புகின்ற யாவருக்கும் கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டு விட்டால் மாணவர்கள் பல துறை[illegible] என்றே எண்ணுகின்றேன். ★

பேட்டி:
வீ. சின்னத்தம்பி

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**த. சூரியப்பிரகாஷ் (பிரகாஷ்)**

9-06-1989

அல்வாய் மேற்கைச் சேர்ந்த தணிகாசலராஜா கமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சூரியப்பிரகாஷ் (9- 6- 89) இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அத்தைமார், அன்ரிமார், சித்தப்பாமார், மாமாமார், வதிரிமாமா குடும்பத்தினர், கொற்றவத்தை மாமாகுடும்பத்தினர், மற்றும் உற்றுர், உறவினர்களும் திக்கம் மடத்துவாசற் பிள்ளையார் அருள்பெற்று பல்கலைகளும்கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றுர்கள்.

''பிறவளவு'.
அல்வாய் மேற்கு,
அல்வாய். (882)

# இந்துக்கல்லூரி எனும் வையத்துள் வாழ்ந்து அதன்வானில்வைக்கப்பட்ட பி. எஸ்.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அமரர் பி. எஸ். குமாரசாமியின் நினைவாக இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

இந்துக்களின் சமய கலாசாரப் பண்பாட்டைப் பேணிப்பாதுகாத்து வளர்க்க தமிழ் சைவப் பெரியோர்களின் பெருமுயற்சியால் பத்தொன்பதாம் நூற்றுண்டு இறுதிப்பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டு இன்று நூற்றுண்டுப் பூர்த்தியைக் காணும் எங்கள் கல்விக்கூடம் யாழ். இந்துக் கல்லூரி.

நூற்றுண்டுவிழாவின் முன்னேடியாக ஸ்தாபகர்களின் பெருநோக்கு வெற்றியைப் பெருமையுடன் அடையாளம் காட்டி நிற்கும் சிவஞான வைரவசுவாமி திருக்குட முழுக்குப் பெருவிழா கல்லூரியின் சரித்திரத்தில் ஒரு மைல்க்கல்.

கல்லூரியின் நூற்றுண்டுச் சரித்திரத்தில் இரண்டாம் அரை நூற்றுண்டு முழுமையாகத் தனது முத்திரையைப் பதித்த தனி ஒரு மனிதர் மறைந்த பழைய மாணவன். ஆசிரியர், அதிபர், பழைய மாணவ சங்கத் தலைவர் பி. எஸ். குமாரசாமி அவர்கள்.

### பி.எஸ்ஸின் கனவு

அன்னையையும் அப்பனையும் வலம் வந்து மாங்கனியைப் பெற்றவன் வேதவிநாயகன் என்றுல், தனது அன்னையாம் யாழ். இந்துக் கல்லூரியை வையமாக வைத்து வாழ்ந்தவர் சிவஞான வைரவர்திருக் கோயிலைக் கனவு கண்ட பி. எஸ். அவர்கள்.

பதினெட்டாம் பிராயம் முடிவதற்கு முன்பு யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து 1946ஆம் ஆண்டு பல்கலைக் கழகப் பிரவேசம் செய்து கல்லூரிக்குப் பெருமை தேடிய மாணவன்.

பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவனுகவும் யாவரையும் கவரக் கூடிய திறமையுள்ள சிறந்த விளையாட்டு வீரனுகவும் திகழ்ந்தார்.

வாழ்க்கை முழுவதுமே யாழ். இந்துக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில் மாணவர்களின் கல்வி செம்மை இவற்றில் செலுத்திய அதே அக்கறையை அதே ஊக்கத்தை சமமாகக் கடைப்பிடித்து கல்லூரியின் கல்வி வளர்ச்சியிலும் விளையாட்டு வெற்றியிலும் எவரும் அதிசயிக்கத் தக்க பெருமை கண்ட ஆசிரியர், அதிபர் திரு. பி. எஸ். அவர்கள்.

''ஈன்ற பொழுது பெரிது
உவக்கும் தன் மகனை
சான்றேன் எனக்
கேட்ட தாய்''

என்ற பெருமகிழ்ச்சி பெற்றவர்கள் இருவர்.

அன்னை யாழ். இந்துக் கல்லூரி ஒருவர்.

மற்றவர் திரு. ஏ. குமாரசுவாமி அவர்கள்

உயர், அரசாங்க பதவிகள் இளம் பிராய இலங்கைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளைத் தேடித் திரிந்த காலம்.

சுதந்திரம் பெற்று இரண்டு ஆண்டுகள் மட்டுமே சென்ற காலம்.

தேசிய இளைஞர்கள் அந்நியர்களின் பதவிகளை நிரப்பிய காலம்.

### முதற் காதல்

ஆனல உயர் அரசாங்க பதவிகள் அவற்றின் வருங்கால உயர்வுகள், பெருமைகள் இளைஞன் பி. எஸ் ஸை அன்னை இந்துக்கல்லூரிக்கு ஒப்பிடத்தக்கவைகளாகக் காண வைக்கவில்லை அதனுற்றுன் போலும் அதிபர் என். சபாரத்தினம் திரு. பி. எஸ். அவர்களின் முதற்காதல் என்று இந்துக்கல்லூரியைக் குறிப்பிட்டிருக்கிறுர்.

''A grievous loss to his First Love''

பதினைந்து நீண்ட வருடங்கள் யாழ். இந்துக் கல்லூரியில் பம்பரம் போல் சுழன்று பி. எஸ். கடமையாற்றியவர். திறமைசாலி. அவரின் திறமை முழுமையாகப் பயன்படுத்தப் பட்டதென்றுல் பயன்பெற்ற அன்னை இந்துக் கல்லூரி தன் குழந்தையை எண்ணிப் பூரிப்படைந்தாள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

கணித, விஞ்ஞானத் துறைகளில் உயர்ந்து நிற்பது யாழ். இந்துக் கல்லூரி. 1950ஆம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி கலைத் துறையில் பிரதானமாக சரித்திரப் பாடத்தில், முன்னைய இரு துறைகளுக்கும் ஈடாகி விட்டதென்றுல் அப்பெருமை, ஆசிரியர் பி. எஸ். குமாரசுவாமி அவர்களின் தனிச் சொத்தாகும்.

''He was par excellence as A teacher of Ceylon History''
— R. யோகநாதன்

யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், கணித, விஞ்ஞான, கலை மாணவர்கள் அனைவரும் ஆசிரியர் பி. எஸ். ஸை யாழ் இந்துக் கல்லூரியின் இன்னொரு தோற்றமாகக் கண்டனர்.

### பி. எஸ். ஸின் சிறந்த இயல்பு

ஆசிரியராகவும் சரி, அதிபராகவும் சரி தனது ஏகாதிபத்தியத்தின் அங்கமான மாணவன் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைத்தவர். எல்லோரையும் தெரிந்து வைத்திருந்தவர். ஒவ்வொரு மாணவனுக்கும் பி. எஸ் ஸின் இந்த இயல்பு நன்கு தெரியும். தங்கள் ஒவ்வொருவரையும் பி. எஸ். அறிந்தவர், திறமை நல்லவை அன்னவையை ஊக்குவிப்பவர். பிழைகளைக்கண்ட இடத்தில் நேராகக் கூப்பிட்டு தண்டிப்பவர். தனது கல்லூரி மாணவர்களைப் பற்றி மற்றவரிடம் கேட்டு அறிய வேண்டிய நிலைமை என்றும் அவருக்கு எழவில்லை. இதனால் பி. எஸ். ஆசிரியராக, அதிபராகக் கடமையாற்றிய எல்லாக் கல்லூரிகளிலும். பிரதானமாக யாழ். இந்துக் கல்லூரியிலும் மாணவர்கள் கட்டுக்கோப்புக்குள் இயங்குவது இயல்பாகி விட்டது.

இ. வி. தளையசிங்கம்
பட்டயக்கணக்காளர்
இங்கிலாந்து - வேல்ஸ்

### ஆளுமைத் திறனுள்ள அதிபர்

சக ஆசிரியர்களை நன்கு அறிந்து வைப்பது, அவரவருக்குத் தேவையான உற்சாகம்; ஆனல் அன்பான ஆணைகள் பி. எஸ். இன் ஆளுமைத் திறன்.

பி. எஸ். இன் சொல்வாக்கு, செல்வாக்கு கல்வித் திணைக்களத்தில் உயர்ந்து நின்றது. கல்வி அதிகாரியாகப் பதவி வகித்தமை, பெற்ற அனுபவம், சேர்த்த மதிப்பு தனது கல்லூரியின் வளர்ச்சிக்கான திட்டத்தை தெளிவாக விளங்கி, எடுத்து விளக்கக்கூடிய ஆற்றல் இவருக்கும் கல்வித் திணைக்களத்திற்கும் நேசப் பாலமாக அமைந்தது.

1983 இல் இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் வந்த மாணவர்களுக்கு போதிய வசதிகள் செய்து கல்லூரியின் கதவுகளைத் திறந்து வைத்திருந்தமை இரு உண்மைகளை விளக்கி நிற்கின்றது. பி. எஸ். இன் சமுதாய உணர்ச்சி ஒன்று. மற்றது அவரின் வேண்டுகோளை கல்வித் திணைக்களம் எப்பொழுதும் ஏற்கும் நிலைமை.

### இணைந்தே பழகும் இயல்பு

பெற்றோருடன் பெற்றோராகப் பழகுவது, மாணவர்களின் இயல்புகளை அவரவர் பெற்றோரிடமிருநதே அறிந்து, பெற்றோரையும் மாணவரையும் திருப்திப் படுத்துவதும் ஊக்கப் படுத்துவதும் பி. எஸ்' இன் கை - வந்த கலை. இதை ''Generation Gap'' என்று அழைப்பார்கள்.

ஆனல் பி. எஸ். இன் ஆளுமையில் இதற்கு இடமே இல்லை. அப்படி ஒன்று இருப்பதாக பி. எஸ். க்குத் தெரியும். இருப்பது தீமையில்லை - அதை ஏற்றுக் கொள்வது, விளக்கமின்மைக்கெல்லாம் அதைச் சாட்டுவது மனித பலவீனம் என்று நன்கு உணர்ந்தவர் பி. எஸ்.

மாணவர்களையும், அவர்களின் பெற்றோர்களையும் நன்கு அறிந்து விளங்கிக் கொண்டு கடமை ஆற்றும் அதிபரின் வெற்றிக்கு வரையறை இல்லை என்பதை பி.எஸ் காலம் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

பி. எஸ். (P.S.)என்ற இரு எழுத்துக்கள், இந்துக் கல்லூரியின் இன்னொரு பெயராகத் திகழ வைத்த பெருமையை அவரின் 1975 இல் தொடங்கிய நீண்ட ஒன்பது வருட கால ஆளுமைபெற்றது.

கல்லூரியில் அவர் கடமை ஆற்றிய காலம் மிகக் குறுகிய காலம். ஆனல் சிந்தனையையும் செயலையும் ஒன்றுகவே நிகழ்த்தக் கூடிய ஆற்றல் மிக்க பி.எஸ். அவர்கள் தமது பதவிக் காலத்தில் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நூற்றுண்டு விழாவைத் திறம்பட நடத்திஞர்.

நூற்றுண்டு விழா மலர் ஒன்றை வெளியிட்டார். சிலைத் திறப்பு விழாவை நடத்திஞர்.

இவற்றை அவரால் எவ்வாறு சாதிக்க முடிந்தது? எண்ணியவர் திண்ணியராகப் பெறின் எண்ணியதெல்லாம் முடியும் என்பது வள்ளுவரின் வாக்கு. ஆம் அவர் எண்ணத்திலே திண்ணியராக இருந்தார். மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார். கருமமே கண்ணுயிருப்பார்.

— கே. நாகராசா
அதிபர்
மகாஜனக் கல்லூரி

கல்லூரியின் வளர்ச்சிக்கு பழைய மாணவரின் பங்கு எத்தகையது என்பதை தனது மாணவப் பருவத்திலேயே நன்கு தெரிந்து வைத்திருந்தார். பாடசாலைக்குத் தேவையான கட்டடங்கள், ஆய்வு கூடங்கள் காலத்திற்குக் காலம் பெருவிழாக்கள் இவைகளை முன்னின்று செய்பவர்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது பி.எஸ். இன் ஆணித்தரமான கருத்து. கொழும்பு பழைய மாணவர் சங்கத்தைப் புனரமைப்புச் செய்தமை கல்லூரிக்குபழைய மாணவர் எத்தகைய ஆணிவேர் என்பதை எக்காலமும் எல்லோருக்கும் உணர்த்தி நிற்கும், சற்பிரதல், சிவஞான வைரவர் பிரதிஷ்டை, பழைய

( 7ஆம் பக்கம் பார்க்க)

## வாசகர் திருமுகம்

### பட்டதாரி ஆசிரியருக்கு உரிய வேதனம் கிடைக்குமா?

மன்னார் மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டு முதல் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்று வரை உரிய சம்பளம் வழங்கப்படவில்லை. 1985 ஆம் ஆண்டு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் பட்டதாரி ஆசிரியர்களாக இம் மாவட்டத்தில் நியமிக்கப்பட்ட 60க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு இதுவரை முறையான நியமனக் கடிதம் வழங்கப்படாதுள்ளதுடன், ஏனைய பட்டதாரி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போல எவ்வித சம்பள மாற்றியமைப்பும் செய்யப்படவில்லை. இவர்களுக்கு 1985 ஆம் ஆண்டிலிருந்து நிலையான வேதனமே வழங்கப்படுகிறது. இதனால் இந்த ஆசிரியர்கள் பொருளாதார ரீதியில் மிகுந்த கஷ்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவ் ஆசிரியர்கள் பலமுறை கல்வித் திணைக்களத்திற்கு இது பற்றி முறையிட்டும், எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாகத்தெரியவில்லை. மன்னார் கல்வித் திணைக்கள அதிகாரிகள் இவ் ஆசிரியர்களுக்கு முறையான நியமனக் கடிதம் கிடைப்பதற்கும், உரிய வேதனம் கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்ட
பட்டதாரி ஆசிரியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி செல்வம் கந்தையா

தோற்றம்: 06-05-1912 — மறைவு: 30-04-1989

எங்களை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு மறைந்த எங்கள் அன்புத் தெய்வமே! இந்நாளில் அல்ல எந்நாளுமே உங்களை மறவோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம். அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 09. 06. 1989 வெள்ளியன்று அன்னார் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளில் கலந்து அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

''சதிஸ் பவன்''
பழைய வீதி,
கோப்பாய் தெற்கு. (866)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### உயர்திரு. நா. சி. கனகசபை
[கொக்குவில் மேற்கு]

தோற்றம்: 09. 05. 1924 — மறைவு: 09. 06. 1988

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், கள்ளம் சிறிதுமில்லா வெள்ளை மனதுடனே எங்கள் இல்லத்தில் தெய்வமாய் விளங்கி எங்கள் நல் வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று எம்மால் மறக்க முடியாதவாறு உமது அன்பால் ஆட்கொண்ட அன்புத்தெய்வமே! உம்மைப் பிரிந்து நாமெல்லாம் உருகி மனம் வெடிக்கின்றோம். ஐயா என்று சொல்ல அருகதையற்று விட்டோம். ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு என்றும் அகலாது உங்களைப் போல் அன்பால் அரவணைக்க எமக்கு இவ்வுலகில் யாருமே இல்லை. எங்கள் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையத் தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மருமக்கள், மச்சான்மார்,
கொக்குவில் மேற்கு, மச்சாள்மார், பேரப்பிள்ளைகள்,
கொக்குவில். மற்றும் உற்றார், உறவினர்கள்.
(11168)

---

17 வயதுக்கு உட்பட்ட மாணவர் கிரிக்கெட்

# யூனியன் கல்லூரி - ஸ்கந்தா

# வெற்றி - தோல்வி இன்றி முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 09

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 17 வயதுக்கு உட்பட்டோருக்கான சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 177 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

சிறப்பாக ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான அகிலன் 80 ஓட்டங்களைப் பெற்றார். பா. யாழ்கோபன் 34, கௌரிபாலன் 25 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் பிரபுராம் 4 விக்கெட்டுக்களையும் ஜெயகோபன், ராஜ்குமார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரவிகரன் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆடிய ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 129 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அலன் 29, ஜெயகோபன் 23, சிவன்சே 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் திலகமோகன் 4 விக்கெட்டுக்களையும் கௌரிபாலன் 2 விக்கெட்டுக்களையும் லக்ஸ்மன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸில் யூனியன் கல்லூரி 3 விக்கெட் இழப்புக்கு 98 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

அணித்தலைவர் இ. ஜோ. இன்பராஜ் 52 ஓட்டங்களையும் கௌரிபாலன், குமணன் ஆகியோர் ஆட்டமிழக்காமல் முறையே 21, 14, ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலளித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 5 விக்கெட் இழப்புக்கு 25 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டம் முடிவுற்றது. குமணன் 3 விக்கெட்டுக்களையும் திலகமோகன், திலீபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அசம்பாவிதங்களினால் யூனியன் கல்லூரி மாணவர்கள் பலரின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் சேதமுற்றதால் யூனியன் அணியினால் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான சுற்றுப் போட்டிக்குப் பதிவுசெய்ய முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-6)

## மணிப்புரி கி. அ. சபையின் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

மணிப்புரி கிராமஅபிவிருத்திச்சபையின் ஓராண்டுநிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப்போட்டிகளுக்கு நிலையத்தலைவர் திரு. நீ. அருளானந்தம் சேவியர் தலைமை வகித்தார்.

விளையாட்டுப் போட்டிகளின் நடுவர்களாகதிருவாளர்கள் யே. தேவசகாயம். கே. பாலசுப்பிரமணியம், என். பத்மராஜா, எஸ். கிறிஸ்ரி, என். கனகலிங்கம், கே. மரியநாயகம், பீற்றர் இம்மானுவல் ஆகியோர் கடமை புரிந்தார்கள்.

4 மைல் மரதன் ஓட்டப் போட்டியில் இ. எஸ். காந்தனும், 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் வீ. சேகரும் 35 வயதுக்கு மேற்பட்டோர் 400 மீட்டர் ஓட்டப் போட்டியில் என். அரியமும் முதலாம் இடங்களைப் பெற்றனர்.

சம்சாரிகளுக்கும் வால்பர்களுக்குமிடையிலான கயிறு இழுத்தல் போட்டியில் சம்சாரிகளும், திருமணமான பெண்களுக்கும் திருமணமாகாத பெண்களுக்கும் இடையிலான போட்டியில் திருமணமாகாத பெண்களும் வெற்றியீட்டினர்.

விநோதஉடைப் போட்டியில் வீ. சேகர் முதலாமிடத்தைப் பெற்றார்,

இவ்வைபவத்தை முன்னிட்டு நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் உதயபுரம்விளையாட்டுக்கழக அணிக்கும் மணிப்புரம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் 3 1 என்ற கோல் கணக்கில் மணிப்புரம் அணி வெற்றியீட்டியது.

மத்தியஸ்தராக கப்டன் டீ. ஏ. எம். குணசிங்கமும், உதவி மத்தியஸ்தர்களாக சீ. யே. அல்பிரட், எஸ். கிறிஸ்ரி ஆகியோரும் கடமையாற்றினார்கள். (க-6)

## நாவலடிப் பாடசாலை விளை. போட்டி

கொடிகாமம், ஜூன் 9

கொடிகாமம் நாவலடி அ.த.க. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை அதிபர் திரு. அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

கொடிகாமம் கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விளையாட்டுப் போட்டிக்குப் பொறுப்பாக திருமதி கு. கமலநாதன் செயற்பட்டார்.

விளையாட்டுப் போட்டிகளில் நாவலர் இல்லம் முதலாம் இடத்தையும் பண்டிதர் இல்லம் இரண்டாம் இடத்தையும் புலவர் இல்லம் மூன்றும் இடத்தையும் பெற்றன.

துணை அதிபர் திருமதி சி. நடராசா நன்றி தெரிவித்தார். (க-75)

## சனசமூக நிலைய சமாஜ பொதுக்கூட்டம்

யாழ் மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

## டாக்டர் பற்றுக்குறை

கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் வைத்தியர்களின் பற்றுக்குறைபால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள மாவட்ட வைத்திய அதிகாரியே வாட்டுகளில் உள்ள நோயாளர்களைப் பார்ப்பதுடன் வெளி நோயாளரையும் பார்க்கவேண்டி உள்ளது. (ச-163)

## பழுதடைந்த நன்னீர்க் குழாய்

குருநகர், ஜூன் 9

குருநகர் மவுண்ட் கார்மேல் ஒழுங்கையில் உள்ள ஒரே ஒரு நன்னீர் குழாயும் பழுதடைந்துள்ளது. (க-51)

# தம்பிலுவில் விநயகபுரத்தில் தும்புத் தொழிற்சாலை நிறுவப்படும்

அம்பாறை ஜூன் 9

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த தம்பிலுவில் விநயகபுரம் பகுதியில் தும்புத்தொழிற்சாலை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றது.

தும்புத்தொழிலுக்கான மூலவளங்களைக் கொண்ட இப்பிரதேசத்தில் தும்புத் தொழிற்சாலை அமைவதன் மூலம் அப்பகுதிமக்களுக்கு தொழில்வாய்ப்பும், வருமானமும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பதினுன்கு லட்சம் ரூபா செலவில் இந்த தும்புத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்படவிருக்கின்றது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை இத்தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாக அறியவருகிறது. (க-14)

## கிளிநொச்சியில் 300 வீடுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 9

ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம் கிளிநொச்சியில் வீடுஅற்றவர்களுக்கு 300 வீடுகளை அமைத்துக் கொடுக்க இருக்கிறது.

கடந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் இதுவரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

விரைவில் வீடுகளும் 40 கிணறுகளும் அமைக்க மேற்படி அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. (ஒ - 3)


அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான

**S. L. A. S**

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை

இப்பரீட்சை ஜூலை மாதம் 29ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளமையால் பலரின் வேண்டுகோளுக்கிணங்க

**புதிய விசேட பயிற்சி வகுப்புகள்**

(பல தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் இணைந்த சேவை)

ஆரம்பம்: 10 — 06 — 89 காலை 9. 00 மணி

★ இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் விண்ணப்பிக்கும் வாய்ப்பு.
★ விண்ணப்ப முடிவு திகதி: 23 — 06 — 1989

கிரகித்தல்: நுண்ணறிவு: விடய ஆய்வு

★ இலவச பாடக்குறிப்புகள் — ★ கட்டணம்: ரூபா 250. 00
★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்.

விபரங்களுக்கு:

**ASTAN INSTITUTE**

166/1 Hospital Road, JAFFNA.

(A. S. ... கட்டிடம் 1ஆம் மாடி.)

(சி-2809)



கட்டிடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

வார இறுதி வகுப்புகள்

ஆரம்பம்: 10- 06 1989 காலை 8. 30 மணி

பயிற்சிநெறிகள்:

1. DIPLOMA IN DRAUGHTSMANSHIP
2. DIPLOMA IN QUANTITY SURVEYING
3. PREPARATION FOR TECHNICAL OFFICERS PROMOTION EXAMS & N. D. T. EXAMS.

(11172)


## முதலாவது நினைவஞ்சலி



பூவுலகில்: 15-01-1911

வானுலகில்: 21-05-1988

திதி: 09-06-1989

### அமரர் அப்பாக்குட்டி முத்தையா
(தரகர்)

ஓராண்டு ஓடி மறைந்தாலும் இதயத்தால் நாங்கள் உங்களை என்றென்றும் மறவோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகன்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

1ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (875)

## 4ஆம் வருட நினைவஞ்சலி



### அமரர் P S. சின்னத்துரை அண்ணாவியார்
[குருநகரைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபரும், நாடகக் கலைஞரும்]

தோற்றம்: 09-01-1905 — மறைவு: 09-06-1985

'' உங்கள் நினைவுகள் எம்முடன் என்றும் பயணிக்கும் ''

பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

82, மவுண்கார்மல் வீதி,
யாழ்ப்பாணம். (சி/2691)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல்.

**பொருள்:**
இன்ன நிலத்தில் இருந்து முளைத்தது என்பதை முளை காட்டும்; அதுபோல் குடியிற் பிறந்தவரின் வாய்ச் சொல் அவருடைய குடி பிறப்பைக் காட்டும்.

உதயன்
இல: [illegible] நாவலர் வீதி, தொலைபேசி 24605 / 23078
யாழ்ப்பாணம்.
09 - 06 - 1989

# நல்ல தருணத்தை நழுவ விடலாமோ....?

நோர்வே, சுவீடன், டென்மார்க் ஆகிய ஸ்கன்டினேவியன் நாடுகளில், தஞ்சம்புகுந்திருக்கும் ஈழத்தமிழ் மாணவருக்குக் கல்விவசதிகள்கூட செய்துகொடுக்கப்படுகின்றன என்பது மகிழ்ச்சிக்கு உரியசெய்தி. அந்தநாட்டு அரசுகள் தமிழ் மாணவரின் உயர் கல்விக்கும் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கின்றன என்பது மனநிறைவைத் தருவதாகும்.

ஜெர்மனி, பிரான்ஸ், கனடா போன்ற மேலைநாடுகள், அகதிகளாகத் தஞ்சம்கோரிச்சென்ற ஈழத் தமிழர்களுக்கு ஆரம்பத்தில் ஒரு சில வசதிகளைச் செய்தன. உணவு, உறையுள் ஆகிய அடிப்படை வசதிகளைமட்டுமே அவை செய்யமுன்வந்தன. அவற்றுக்காக ஒருதொகை ஆதாரப் பணத்தை (Dole) வழங்கிவந்தன. ஆனால் தங்கள் நாடுகளுக்குச் செல்லும் தமிழர்களின் எண்ணிக்கை உயர உயர, பிரஸ்தாப நாடுகள் ஆதாரப்பணத்தையே நிறுத்தும் நிலைக்குவந்தன.

ஆனால் முன்னர் குறிப்பிட்ட ஸ்கன்டினேவியன் நாடுகள், மனித உரிமைகளை மதிக்கும் விதத்தில், திட்டமிட்டு அகதிகளை அனுமதிக்கின்றன; அதன் பின்னர் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கின்றன. கல்வி பயிலும் வயதில் பிள்ளைகள் இருந்தால் கல்விவசதியும் செய்து கொடுக்கிறார்கள். உயர்கல்விபெறத் தகுதியுடைய மாணவர்கள் இருப்பின் அதற்கும்வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கிறார்கள். ஜேர்மனி, பிரான்ஸ் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது ஸ்கன்டினேவியன் நாடுகள் நியாயபூர்வமாக நடந்துகொள்வதைத் தமிழர்கள் நன்றி அறிதலுடன் பதிவுசெய்துகொள்ளவேண்டும்.

அகதிகளாகிவிட்டதால் இளம்வயது மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டு, அவர்களது எதிர்காலம் பாழடிக்கப்பட்டுவிடக்கூடாது என்ற உயரிய தத்துவத்தின் அடிப்படையிலேயே, பிரஸ்தாப நாடுகள் கல்விவசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கின்றன.

ஆனால் காலத்தால் செய்யப்படும் அந்தப்பெரிய உதவியின் மகத்துவம்புரியாமல், அந்த நாடுகளுக்குச் சென்றுள்ள தமிழ் இளைஞர்கள் தொழில்செய்து பணம் தேடுவதிலேயே அதிகநாட்டம் காட்டுகிறார்கள் என்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற முதுமொழி நூற்றுக்கு நூறு அர்த்தபுஷ்டியானது. உரிய பருவத்தே கல்வியைப் பெறவேண்டும்; காலத்தைத் தப்பவிட்டால், கல்வியை ஒழுங்காக, சீராகப்பெறமுடியாது, பின்னர் ஒரு காலத்தில் வருந்தநேரிடும். கிடைக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு பின்னர் கவலைப்படக்கூடாது.

பணத்தை, இப்போது இல்லாவிட்டால் பின்னர் தேடிக் கொள்ளலாம். கல்வி அப்படியல்ல. உரிய பருவத்தில் கல்வியைத் தேடிக் கொள்ள வேண்டும். தப்பவிட்டால், வாழ்க்கையில் பல கஷ்டங்களை எதிர்நோக்க நேரிடும்.

ஸ்கன்டினேவியன் நாடுகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் இதனை நன்றாக உணர்ந்துகொள்ள வேண்டும். அந்த நாடுகளுக்குப் போய்ச் சேருவதற்குத் தமது பெற்றோர் பட்ட கடனை அடைக்கவும், வயதான பெற்றோரின் சீவியத்துக்கு அங்கிருந்து உதவுவதற்கும் அவர்களுக்குப் பணம் தேவைப்படலாம். ஆனால் அந்தத் தேவைகளை மெதுமெதுவாகச் சமாளித்துக் கொண்டு கல்வி வசதிக்கான வாய்ப்பை தக்கபடி பயன்படுத்தி தமது எதிர்காலத்தை வளமுள்ளதாக்க முனைய வேண்டும்.

ஸ்கன்டினேவியன் நாடுகளில் கல்வி வசதி பெற்ற மாணவர்கள் மன நெருடல்கள், நெருக்கடிகள் எதுவும் இல்லாத சூழ்நிலையில் நிம்மதியாகத் தமது கல்வியைப் பெறும் வாய்ப்பு உண்டு என்பதையும் மறந்துவிடக் கூடாது.

என்ன பணக் கஷ்டம் இருப்பினும் தமக்குக் கிடைத்திருப்பது பொன்னான, பிரத்தியேகமான வாய்ப்பு என்பதை உணர்ந்து கல்வி வசதியைத் தக்கபடி பயன்படுத்த வேண்டும். இதனை இங்குள்ள அவர்களது பெற்றோர்களும், உறவினர்களும் இடித்துரைக்க வேண்டுகிறோம்.

நல்ல தருணத்தை நழுவ விடலாமோ......?

## நாகம் ஓர் பூக்கொண்டு வருகுது

எடுப்பு

நாகமோர் பூக்கொண்டு வருகுது—அதை
நாகம்மாள் முடிமிசை சூட்டுது (நாகம்)

தொடுப்பு

ஓம்என்று கடல்அலை ஒலிக்குது—அது
ஓம்சக்தி புகழ்தினம் பாடுது (நாகம்)

முடிப்பு

பச்சென்று வேம்புகள் பரவுது—அவை
படர்ந்து குளிர்நிழல் பரப்புது
இச்சைபோல் அடியவர் சூழ்கிறார்—அவர்
இதயத்தில் அம்பிகை வாழ்கிறாள்.

—நயினைக் கவிஞர் நாக. சண்முகநாதபிள்ளை

(இன்று நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் ஐந்தாம் திருவிழா—9-6-1989)

# பாகிஸ்தானுக்கு போர்விமானங்கள், ஏவுகணைகள்வழங்க அமெரிக்காமுடிவு

## புஷ் - பெனாஸிர் சந்திப்பின் பலன்

வாஷிங்டன், ஜூன் 8
தெற்காசியாவை அணு ஆயுதமற்ற பிராந்தியமாக்க வேண்டும் என்ற யோசனையை பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ நேற்று அமெரிக்க காங்கிரஸின் இரு சபைகளின் கூட்டத்தில் வெளியிட்டார்.

முதலாவது அமெரிக்க விஜயத்தின்போது பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு காங்கிரஸில் பேசும் கௌரவம் வழங்கப்பட்டது.

பிரதமர் பெனாஸிர் பேசுகையில்;

பாகிஸ்தானிடம் அணு ஆயுதம் எதுவுமே கிடையாது. அணு ஆயுதம் ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியிலும் பாகிஸ்தான் ஈடுபடவில்லை.

தெற்காசியாவை அணு ஆயுதமற்ற பிராந்தியமாகப் பிரகடனப்படுத்த வேண்டும் என்றயோசனையைஎனதுஅரசு ஆதரிக்கிறது.

பாகிஸ்தானில் உள்ள அணு நிலையங்களை பார்வையிட சர்வதேசக் குழுக்களையும் அனுமதிக்க பாகிஸ்தான் தயாராக இருக்கிறது.

ஆனால் ஒரு நிபந்தனை. அணு சோதனைகளை நடத்தும் ஏனைய நாடுகளும் சர்வதேசக் குழுக்களை தங்களின் அணு நிலையங்களை மேற்பார்வையிட அனுமதிக்க வேண்டும்.

இப்படி பிரதமர் பெனாஸிர் சொன்னார்.

இதனிடையில் பாகிஸ்தானுக்குமேலும் 60 எப்-16ரக சண்டை விமானங்களை விற்க அமெரிக்கா ஒப்புக் கொண்டிருக்கிறது.

இவ் விமானங்களின் பெறுமதி 140 கோடி டாலர் ஆகும்.

பாகிஸ்தான் கடற்படையைப் பலப்படுத்த 64 விமான எதிர்ப்புப் பீரங்கிகளையும் வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது. இவற்றின் பெறுமதி 4 கோடி டாலர் ஆகும்.

இதேவேளை — பாகிஸ்தானுக்கு வழங்கும் ஆயுத உதவியைக் குறைக்க வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவு செனட் கமிட்டிக் கூட்டத்தில் அதன் தலைவர் பட்ரிக் மொய்னிஹன் வலியுறுத்தினார்.

ஆப்கனில் இருந்து சோவியத் துருப்புக்கள் விலகி விட்டன. அதனால் பாகிஸ்தானுக்கு இருந்த பாதுகாப்பு நீங்கிவிட்டது என்று அவர் காரணம் காட்டினார்.

ஆனால் வெள்ளை மாளிகையின் தென் ஆசிய விவகாரம் தொடர்பான உதவிச் செயலாளர் ஜோன் கெல்லி பதிலளிக்கையில்;

சோவியத் யூனியனிடம் இருந்து இன்னமும் பாகிஸ்தானுக்கு பயமுறுத்தல் வருகின்றது என்று சொன்னார். (எ)

## பாகிஸ்தானில் வந்து விழுந்த சோவியத் 'ஸ்கட்' ஏவுகணை!

இஸ்லாமாபாத், ஜூன் 8
கடந்த மாதம் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் வந்து விழுந்த 'மர்ம' ஏவுகணை அடையாளங் காணப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனால் ஆப்கன் அரசுப் படைகளுக்கு வழங்கப்பட்டுள்ள 'ஸ்கட்' ரக நீண்டதூர ஏவுகணைகளில் ஒன்றேபஞ்சாப் மாகாணத்தை நோக்கி ஏவப்பட்டது என்று பாகிஸ்தான் அரசு நியமித்த உத்தியோகக் கமிட்டி அறிவித்திருக்கிறது.

பாகிஸ்தான் பிரதேசத்துக்குள் ஏவப்பட்ட மூன்றாவது சோவியத்ஏவுகணைஇதுவாகும்.

பஞ்சாபில் பாக்கர் என்னுமிடத்தில் வந்து விழுந்த ஏவுகணையினால் 11 மீற்றர் ஆழமானதும், 26 மீற்றர் அகலமானதுமான குழி ஒன்று ஏற்பட்டது. உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை. (எ)

## உஸ்பெக்கிஸ்தான் கலவரம்; 70 பேர் பலி: 400 பேர் கைது!

தாஷ்கெண்ட், ஜூன் 8
சோவியத்யூனியனில் உள்ள உஸ்பெக்கிஸ்தான் மாநிலத்தில் ஏற்பட்ட இன மோதல்களில் 70 பேர் வரையில் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினரால் 400 பேர்வரை கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அமைதியின்மையைத் தூண்டியதாக அவர்கள்மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சோவியத் ஜனாதிபதி கோர்பச்சேவ், உஸ்பெக்கிஸ்தான் கலவரம் குறித்து கவலை தெரிவித்தார். (எ)

## ஜோர்ஜ் புஷ்ஷின் லண்டன் விஜயம்

லண்டன், ஜூன் 8
அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் இன்று லண்டன் சென்றார்

ஜனாதிபதியான பின்னர் பிரிட்டனுக்கு திரு. புஷ் மேற்கொண்ட முதலாவது விஜயம் இதுவாகும்,

பிரதமர் தட்சருடன் திரு. புஷ் பேச்சு நடத்தினார். பின்னர் எலிசபெத் மகாராணி அளித்த விருந்துபசாரத்தில் திரு. புஷ் கலந்து கொண்டார் (எ)

## ஆயதுல்லா கொமேனியின் மறைவு; ருஷ்டியின் தலைமறைவு வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைக்குமா?

லண்டன், ஜூன் 8
ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனியின் மறைவினால் தனது தலைமறைவு வாழ்க்கைக்கு முடிவு வரும் என்பதில் எழுத்தாளர் சால்மன் ருஷ்டிக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை.

சால்மன் ருஷ்டிக்கு பாதுகாப்புக் கமிட்டிப் பிரமுகர் சுமந்தா ஹொப்கின் முன் கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ருஷ்டி எழுதிய 'சாத்தானின் கவிதைகள்' நூல் தெய்வ நிந்தனையானது என்று கூறி அவர் மீது மறைந்த ஆயதுல்லா கொமேனி மரண தண்டனை விதித்தார் என்பது தெரிந்ததே.

கொமேனிக்கு பின்னர் ஈரானின் புதிய ஆத்மீகத் தலைவராக 50வயதான அலிகாமெனி பதவி ஏற்றுள்ளார்.

41 வயதான ருஷ்டி மீது விதிக்கப்பட்ட மரண தண்டனையை இவர் உறுதிப்படுத்தியவர்.

இவர் அண்மையில் பீகிங் சென்று இருந்த சமயம்,

துப்பாக்கியில் இருந்து குண்டு புறப்பட்டு விட்டது. குண்டின் மீது பெயர் பதியப்பட்டு விட்டது. இலக்கை அது விரைவாகவோ, தாமதமாகவோ சென்று அடையும்'- இப்படி தற்சமயம் புதிய ஆத்மீகத் தலைவராகப் பதவி ஏற்றுள்ள, ஆயதுல்லா அலிகாமெனி தெரிவித்தார். (எ)

## பீகிங் ராணுவ நடவடிக்கையில் ஏழாயிரம் பேர் பலி!

பீகிங், ஜூன் 08
சீனாவின் ராணுவ நடவடிக்கையின்போது உயிரிழந்தோரின் எண்ணிக்கை ஏழாயிரத்துக்கும் அதிகம் என்று மேலைநாட்டு புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்தன.

இவர்களில் 6ஆயிரம் பேர் சிவிலியன்கள் ஆவர்.

சுமார் ஆயிரம் துருப்புக்களும் மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

துருப்புக்களில் சிலர் ராணுவ நடவடிக்கையின்போது தவறுதலாகச் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்றும் இன்னும் சிலர் கிளர்ச்சிக்காரர்கள் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

மேலும் ஆயிரக்கணக்கில் இராணுவத் துருப்புக்கள் பீகிங் நகருக்குக் கொண்டு வரப்பட்டன.

சுமார் ஒருகோடி மக்கள் வசிக்கும் பீகிங் இன்னும் செயலிழந்து இருக்கின்றது. (எ)

## நேபாளம்-இந்தியத் தகராறு காஞ்சி ஸ்வாமிகள் கருத்து!

ஜெய்ப்பூர், ஜூன் 8
நேபாள - இந்தியத்தகராறு பற்றி காஞ்சி சங்கராச்சாரிய ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கருத்து வெளியிட்டார்.

நேபாள மன்னரை இரண்டு முறை சந்தித்துப் பேசினேன். சிறிய நாடான நேபாளம் அதன் நலன் கருதி இந்தியாவுடன் நட்புறவை பலப்படுத்த வேண்டும் என்று அப்போது மன்னருக்குத் தெரிவித்தேன்.

''இரு நாடுகளின் பிரச்சினைகளை உலகம் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் வேறு பிரச்சினைகள் உருவாகலாம்'' — என்றும் காஞ்சி ஸ்வாமிகள் கவலை தெரிவித்தார். (எ)

# 80 ஜூலை; வேலை இழந்தோருக்கான சலுகைகள் தனியார் துறைக்கும் பொருந்தும்

## சுற்றறிக்கையில் மேலும் விவரங்கள்

கொழும்பு ஜூன் 9
1980 ஜூலையில் இடம்பெற்ற பொது வேலை நிறுத்தம் காரணமாக தொழில் இழந்த தனியார் துறை ஊழியர்களுக்கும் அரசாங்க துறை ஊழியர்களுக்கும் வழங்கப்படும் சலுகைகள் கிடைக்கும். இது தொடர்பாக தனியார் துறையினரை தொழில் அமைச்சு கேட்டுக் கொள்ள இருக்கிறது.

1980 ஆம் ஆண்டு பதவி இழந்த அரசு கூட்டுஸ்தாபன ஊழியர்கள் சம்பந்தமான அமைச்சரவை மேற்கொண்ட முடிவுகள் சம்பந்தமாக வெளியிடப்பட்ட 32/89 இலகக்ச் சுற்றறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

★ 1980 ஆம் ஆண்டு ஜூலை மாத வேலைநிறுத்தத்தின் போது பதவி விலக்கப்பட்டு மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படாதவர்கள் இளைப்பாறல் மற்றும் ஏனைய நிவாரணம் வழங்கப்படாதவர்கள் ஆகியோர் அனைவருக்கும் மிகவும் சாதகமான ஓய்வூதிய நலன்கள் வழங்கப்படும். இந்த ஊழியர்கள் அனைவரும்அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதிவரை இடையறுச் சேவையுள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்.

1980 ஜூலை மாதம் தொட்டு அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதிவரை சம்பள ஏற்றங்கள் முறைப்படி கொடுக்கப்பட்டு அவர்தம் சம்பளத்துடன் சேர்ந்துள்ளன என்னும் உத்தேச அடிப்படையில் அவர்களது ஓய்வூதியங்களும் இளைப்பாறல் நலன்களும் கணிக்கப்படும்.

ஓய்வூதியத்தை இளைப்பாறல் நலன்களை வழங்குவதற்கு சேவைக்காலம் கணக்கிடுமிடத்து அமுலுக்கு வரும் இளைப்பாறல் திகதியாக அல்லது முடிவுறுத்தல் திகதியாக இந்த அமைச்சரவை தீர்மானம்எடுக்கப்பட்ட திகதி அல்லது குறிப்பிட்ட உத்தியோகத்தர் 55 வயதைப் பூர்த்தி செய்ததிகதி எடுத்துக்கொள்ளப்படும்.

★ 336 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் படி வழங்கப்பட்ட இளைப்பாறல் மற்றும் ஏனைய நலன்களைப்பெற்றுக் கொண்டோர் விடயத்தில் அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள ஓய்வூதியங்கள் பணிக்கொடைகள் மற்றும் பிறநலன்கள் யாவும் மேற்சொன்ன நியதிகளுக்கேற்ப மீள ஆய்ந்து சரிசெய்யப்படும்.

★ 1980 ஆம்ஆண்டு ஜூலை மாதத்தில் அரசாங்க, உள்ளூராட்சி கூட்டுத்தாபனத்துறைகளில் தகுதிகூர் நிலையிலோ தற்காலிக நிலையிலோ சேவையில் அமர்த்தப்பட்டிருந்த ஊழியர்களின்ஓய்வூதியங்களும் ஏனைய இளைப்பாறல் நலன்களும் இந்நோக்கத்திற்கென கணிக்கப்படுமிடத்து இவ் அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்ட திகதிவரை அவர்கள் தொடர்ந்து சேவையாற்றியவர்களாகக் கருதப்படுவர்.

★ அரசாங்க, உள்ளூராட்சி மற்றும் கூட்டுத்தாபன துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களில் சேவையாற்றிய பாதிக்கப்பட்ட ஊழியர்கள் பெற்றுக் கொண்ட கடன் தொகைகள் மீதான வட்டி அறவிடப்படமாட்டாது. ஆனால்கடன்களுக்குரிய முதலாவது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு கொடுமதியான ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பிற கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்படும்.

★ இளைப்பாறுதற்கான விருப்பத்தைத் தெரிவிக்காமல் அல்லது பணிக்கொடைகளையோ பிற நலன்களையோ பெற்றுக்கொள்ளாமல்இறந்த ஊழியர்களது மனைவி/கணவர்மார்களும் அண்டி வாழ்வோர்களும் இறந்தவர் இத்தீர்மானம் எடுக்கப்பட்ட திகதிவரை அல்லது ஐம்பத்தைந்து வயது நிரம்பும் திகதிவரை தொடர்ந்து சேவையில் இருந்தவராகக் கருதப்பட்டு ஓய்வூதியத்தையும்பணிக்கொடையையும் பிற நலன்களையும் பெறுதற்கு உரித்துடையவராவர்;

★ மேற்சொன்ன நியதிகளின் படி இளைப்பாறியவர்களாகக் கருதப்பெறும் ஊழியர்கள் அனைவரும் அவர்களது வயது, அனுபவம், தகைமைகள், வினைத்திறமை ஆகியவற்றுக்கேற்ப, மீண்டும்சேவையில் அமர்த்தப்பட தகவுடையவர்களாகவும் கணிக்கப்பெறுவர். அவர்கள் அரசாங்கத் திணைக்களங்களிலோ, உள்ளூராட்சி அதிகாரசபைகளிலோ கூட்டுத்தாபனங்களிலோ நியதிச்சட்ட சபைகளிலோ மீண்டும் சேவைக்கு அமர்த்தப்படலாம். எனினும் மீள சேவைக்கு அமர்த்தும் விண்ணப்பங்கள் யாவும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்களின் மீள் சேவைக்கு அமர்த்துகைக்கான செயலாளர்கள் துணைக் குழுவின் அங்கிகாரத்தை நாடுவதற்கு சம்பந்தப்பட்டஅமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

1980 ஜூலைமாதத்திலிருந்து சேவையில் சேர்க்கப்பட்ட அரசாங்கஉள்ளூராட்சிமற்றும் கூட்டுத்தாபனத் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் மீது பல்வேறு பொது திருவாகச் சுற்றறிக்கைகளின் வாயிலாக விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் வாபஸ் பெறப்படும்.

1980 ஜூலை மாதத்தில் பதவி விலக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்கள் அனைவருக்கும் அரசாங்கத்துறை ஊழியர்களுக்கும்வழங்கப்படுகின்ற இதே சலுகைகளை வழங்கி நிவாரணம் அளிக்க வேண்டுமென தனியார் துறை பணிகொள்வோர்களை தொழிலமைச்சு கேட்டுக் கொள்ளும். (க-7)

## இந்துக் கல்லூரி.,.

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் சங்கத்தின் பெரும் பொறுப்பை எக்காலமும் எவர்க்கும் உணர்த்தும்.

**நேர்மை என்றால் பி. எஸ்.**

பி. எஸ் இன் நேர்மையான பாரபட்சமற்ற சொல்லில் நேர்மை, செயலில் நேர்மை என்ற செம்மைகள், எவை உண்டோ அவை எல்லாம் நிறைந்த கல்லூரியின் வளர்ச்சியை மையமாகக் கொண்ட ஆளுமை யாழ். இந்துக் கல்லூரியின் சரித்திரத்தில்பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படுபவை.

அமரரின் ஆத்மாவுக்கு இரு திருப்திகள். சிவஞான வைரவர் ஆலயம் நிறைவு பெற்றது ஒன்று. மற்றது யாழ். இந்துக் கல்லூரியின் செய்நன்றி மறவாமை. யாழ் இந்துக் கலலூரி என்ற பெரு விருட்சத்தை காலமாக—

'' கற்க கசடறக் கற்பவை
கற்ற பின்
நிற்க அதற்குத் தக ''

என்ற தெய்வ மந்திரத்தை உள்ளடக்கிய பேழையைத் தாங்கி நிற்பது குருவுக்கு ஆசானுக்குக்கட்டுப்பட்டதாக நடத்தலல்லால் வேறெது அதன் பெருமைக்குப்பொருந்தும். யாழ் இந்துக் கல்லூரி, என்னும்புத்தம் புதிய மலரில், பி. எஸ். நன்மணமும் நல் அழகுமாகக் கலந்துவிட்டார்.

இந்துக் கல்லூரியென்ற வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தபி.எஸ்இந்துக்கல்லூரி என்ற வானில் வைக்கப்பட்டு விட்டார். கல்லூரிக்கு தான் வகுத்த திட்டங்களையெல்லாம் ஒவ்வொன்றாக செயற்படுத்திக் கொண்டிருக்க சிவஞான வைரவப் பெருமானின் பாதார விந்தங்களில் நிலைத்து விட்டார் எங்கள் பி.எஸ்.

வில்லியம் ஷேக்ஸ்பியரின் அழகான வார்த்தைகளில்;

'' He Loved''
Hindu College
Not Wisely But Too Well

## செங்கரத்தில் ஏந்தி நின்றோய்!

மாந்தளிரும் மல்லிகையும் முல்லை மொட்டும்
மேனியிலே பட்டாலும் முள்ளாய்த் தைக்கும்
பூந்துகில்என் விடமில்லை பெற்ற பொன்னைப்
போர்த்துத்தான் வைக்கவென்று புனித அன்னை
சாந்தமொடு ஈன்றுவந்த கவைக்குந் தேனை
சரித்திரத்து நாயகனைச் செங்கரத்தில்
ஏந்திநின்றோய்! அருளொளியை ஏற்றி வைத்த
அந்தோனி எனுந்தூயா! அபயந் தாராய்!

—பாஷையூர் மு. சிங்கராயர்

(இன்று 9-6-89 பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஆறும் நாள் திருவிழா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/மாவட்ட பாடசாலைகளுக்கு

**ஓர் நற்செய்தி**

மதிய உணவு திட்டத்திற்கேற்ப நீங்கள் ஓடர் செய்யும் **'ஜீவாகாரத்தை'** உங்கள் பாடசாலைகளிலேயே விநியோகம் செய்வதோடு விலையும் குறைத்துள்ளோம். மேலும் விபரங்களுக்கு;

**அண்ணா தொழிலகம்**
**இணுவில்.**



# உதயன்

09 - 06 - 1989 வெள்ளிக்கிழமை



பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவு திட்டத்திற்கு உகந்தது

**"ஜீவாகாரம்"**

இதில் தேவையான அளவு கலோரி புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கியுள்ளது.

**அண்ணா தொழிலகம்**
**இணுவில்.**


# அமைதிப்படை வெளியேறும் ரஞ்சன் நம்பிக்கை!

கொழும்பு, ஜூன் 9

ஜனாதிபதி பிரேமதாஸா கேட்டுக் கொண்டபடி சரியான நேரத்தில் அமைதிப்படை வெளியேறும் என நான் நம்புகிறேன்.

—வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தின இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது அவர் மேலும் கூறியதாவது:-

பிரதமர் ராஜீவ் காந்தி தனது நம்பகத்தன்மையைப் பணயம் வைக்கமாட்டார் என்று எண்ணுகின்றேன்.

இந்திய அரசின் நோக்கம் குறித்து நாம் சந்தேகப்படவில்லை. இந்தியா தனது சொல்லைக் காப்பாற்றவேண்டும் என்று நம்புகின்றேன்.

நிர்ப்பந்தம் காரணமாகத்தான் அமைதிப்படையை விலக்கும்படி இலங்கை அரசு கோரியிருப்பதை மறுக்கிறேன்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஏற்பட்ட அமைதி ஒப்பந்தத்தை இந்தியா முழுமையாக நிறைவேற்ருத காரணத்தினுலேயே இந்திய அமைதிப்படை, இலங்கையை விட்டு வெளியேற வேண்டும்.

தமிழ்ப் போராளிகளிடமுள்ள ஆயுதங்களைக் கைப்பற்றித் தருவதாகக் கூறிய இந்த உடன்படிக்கை நிறைவேறவேயில்லை.

ஜூலை 29க்குள் அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று முன்பு அறிவித்தது குறித்து மீண்டும் பேச்சுக்கள் நடத்தத் தயாராக இருந்தாலும், அதே திகதிக்குள் அமைதிப்படை முழுவதும் நாடு திரும்ப வேண்டும் என்பதை ஜனாதிபதி பிரேமதாஸா தொடர்ந்து வற்புறுத்துவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனுன அடுத்த கட்டப் பேச்சுக்கள், அடுத்த பத்துத் தினங்களுக்குள் ஆரம்பமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைதிப்படை வாபஸான பின்னர், ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்புப் போன்று வடக்கு - கிழக்கு மக்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும்.

வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றி கிழக்கில் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்புப் பற்றி இன்னும் சில தினங்களில் ஜனாதிபதி அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார்.

—என்றூர். (உ-எ)


ST. PATRICK'S COLLEGE, JAFFNA

**Athletic Meet Postponed**

Parents, Old Boys & Officials, please note that the above Meet scheduled for Saturday, 10th June 1989, will take place on Sunday, 18th instant. Regret any inconvenience caused.

**Rector**

(C/2694)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## திருமதி எப் ரி செபஸ்தியன் (ஞானு)

**மண்ணில்:** 17 - 03 - 1914

**ஆண்டவன் அரவணைப்பில்** 11 - 05 - 1989

திருமதி ஞானு செபஸ்தியனின் ஆத்ம சாந்திக்காக 10 - 06 - 89 காலை 11 மணிக்கு யாழ் அடைக்கல மாதாகோவிலில் பூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் சமுகம் தந்து அன்னாரின் பிரார்த்தனைகளில் கலந்து, மதிய போசனத்திலும் பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறேம்.

மேலும் அன்னர் நோய்யுற்ற காலங்களில் அவரை அன்புடன் பராமரித்த வைத்தியர்களுக்கும், யாழ் ஆஸ்பத்திரி அவசரசிகிச்சைப் பிரிவைச்சேர்ந்த வைத்திய கலாநிதி அவர்களுக்கும் சக ஊழியர்களுக்கும், அவர் காலம் சென்ற வேளையிலும் தொடர்ந்து நடந்த சடங்குகளில் கலந்து கொண்டவர்களுக்கும் பல வகைகளில் உதவியவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை அனுப்பிய அன்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்படிக்கு
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

(11207)

## செய்திச் சாரம்

### நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 9

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் ஆதரவில் இரா. நவீரப்பன் எழுதிய 'மூன்று நாடுகள் அறுபதுநாட்கள்' என்ற நூலின் வெளியீட்டுவிழா நாளை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

திரு. பொன். பூலோகசிங்கம் விழாவிற்குத் தலைமை வகிப்பார். (உ-3)

### இன்னும் விடுதலை இல்லை

தாளையடி ஜூன் 9

வடமராட்சி கிழக்கில் கடந்த வாரம் மாமுனை சம்பவத்தின் பின்னர் கைதுசெய்யப்பட்ட 13 பேரும் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது. (ஒ-144)

### அரச செலவில் அடக்கம்

பச்சிலைப்பள்ளி, ஜூன் 9

கடந்த திங்கட்கிழமை வரணியில் மரணமான நான்கு இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் இருந்து அரச செலவில் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன. [உ-117)

### திருமலையில் இன்று மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு-கிழக்கு மாகாண புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றிய மாநாடு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை திருகோணமலையில் நடைபெறுகிறது.

வடக்கு-கிழக்கில் உள்ள சகல அரச அதிபர்களும் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டு இருக்கிறர்கள். [ஒ-13)

### விரிவுரைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்புளோமா பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

### வருடாந்த உற்சவம்

மானிப்பாய், புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று மாலை நடைபெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

தினமும் மாலை 4 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பித்து நவநாள் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

17 ஆம் திகதி நற்கருணை வழிபாடு, சற்பிரசாத சுற்றுப் பிரகாரம் என்பன இடம் பெறும்.

18 ஆம் திகதி காலை 7.15 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியை தொடர்ந்து திருச்சொரூபப் பவனி நடைபெறும். (உ-51)

### தொலைத் தொடர்பு சாதனம் கொள்ளை

கொழும்பு, ஜூன் 9

கடந்த திங்கள் இரவு பண்டாரவளையில் அரச தோட்டம் ஒன்றுக்குச் சொந்தமான ஜீப் வண்டி ஒன்றையும், பத்து துப்பாக்கிகளையும் தீவிரவாத சந்தேக நபர்கள் கோஷ்டி ஒன்று கொள்ளையடித்தது.

அதி சக்திவாய்ந்த தொலைத் தொடர்பு சாதனம் ஒன்றும் கொள்ளையிடப்பட்டது. (ஒ-எ)

### ஜப்பானில் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூன் 9

முன்னுள் ஜனாதிபதி ஜெயவர்த்தன தனது துணைவியாருடன் கடந்த புதன்கிழமை மாலை ஜப்பான் பயணமானர்.

டோக்கியோவில் இன்று [வெள்ளி] ஆரம்பமாகும் சர்வதேச கருத்தரங்கில் திரு. ஜெயவர்த்தன முக்கிய உரை நிகழ்த்தவிருக்கிறர்.

திருமதி ஜெயவர்த்தனவும் அவரும் வருகிற 13 ஆம் திகதி நாடு திரும்புவர். (உ-எ)

### மூவருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ் மாவட்டத்திற்கு மேலும் 3பேர் விஞ்ஞான கணித ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

நியமனம் பெற்றுள்ள வி. கிருபாகரன் (8-ஆம் வட்டாரம் நயினதீவு] ஏ. நந்தினி (வியாபாரிமூலை) கே. சந்திரவதனி (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை). ஆகியோரை இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக யாழ் கல்வித்திணைக்களத்துக்குச் சமுகம்தருமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (உ-3)

### சேவைக்காலப் பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 9

நல்லூர் வட்டார மனைப் பொருளியல் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும். சகல மனைப்பொருளியல் ஆசிரியர்களையும் தவருது பயிற்சியில் பங்குபற்றும்படி சேவைக்கால ஆசிரியர் திருமதி கு. திருஞானசம்பந்தன் கேட்டுக்கொண்டுள்ளார். (க)

### கெருடாவில் வாசி சுட்டுக் கொலை

பச்சிலைப்பள்ளி, ஜூன் 9

சாவகச்சேரி பெரும்குளம் சந்தியில் இளைஞர் ஒருவர் நேற்றுப்பகல் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொலையுண்டவர் பெருங்குளம் சந்தியில் சைக்கிள் திருத்தும் கடை உரிமையாளரான கெருடாவிலைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் (வயது28 என்பவராவார். [ஒ-117]

### மாணவர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையிலிருந்து விலக முயற்சிக்கும் இந்த நேரத்தில் இங்கும் ஒரு கலவரமான சூழ்நிலை உருவாவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

மாணவர்கள் கலவரங்களில் ஈடுபடும்போது அதனை அடக்க பொலீஸார் பெரும் முயற்சிகளை எடுக்கிறர்கள்.

கூடிய பொறுமையுடன் நடக்கும்படி நான் அவர்களுக்குக் கட்டளை இட்டிருக்கிறேன்.

முதலில் அவர்கள் அன்புடன் சொல்கிறர்கள். பின்னர் கண்ணீர்ப் புகை. அதற்கும் கட்டுப்படாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கிறர்கள். அதில் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றது. இதனைச் சாட்டாக வைத்து பிரஸ்தாப சிறு குழுவினர் மேலும் கலவரங்களை தூண்டுகிறர்கள்— என்றூர். [உ-9]

### பேச்சுக்கள்---

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

புதியவர்களை நியமிப்பதே முறையானதாகும்.

அதற்கு மாருக சட்டத்தை மாற்றி தேர்தல் நடத்த முற்பட்டால் அப்போதைய அரசியல் சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் அத்தேர்தலில் நாம் போட்டியிடுவதா என்பது குறித்து முடிவு செய்வோம்- என்று அவர் கூறினர். (ஒ-10)

### மாங்குளத்திற்கு----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் சம்பவம் நடந்த இடத்தில் கைவிடப்பட்டு கிடக்க காணப்பட்டதாக அப்பகுதியூடாகப் பயணம் செய்த பிரயாணிகள் சிலர் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலை அடுத்து நேற்று காலையில் மாங்குளத்திற்கு அப்பால் போக்குவரத்துகள் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன. ஆயினும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. (உ-9-164)

### ரூபா எட்டரை---

[1ஆம் பக்கத் தொடர்சசி]

இந்த நிதி அடுத்த ஆண்டு ஆகஸ்ட்டிற்கு முன்னர் செலவிடப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனல் இந்த ஒதுக்கீடுகளைச் செலவிட்டுப் புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்குத் தேவையான தொழில் நுட்பவியலாளர்களுக்குப் பற்ருக்குறை நிலவுகிறது.

இதனுல் இந்த ஒதுக்கீடுகளைச் செலவிடும் வேகம் ஆமை வேகத்திலேயே இருப்பதாகக் கூறப்படுகிறது.

இருபத்தைந்துக்கு மேற்பட்ட தொழில் நுட்பவியலாளர்களும், 76வேலைத்தல மேற்பார்வையாளர்களும் யாழ். கல்வித் திணைக்களக் கட்டடப் பகுதிக்குத் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனல் தற்பொழுது 3 தொழில்நுட்பவியலாளரும், 3 வேலைத்தல மேற்பார்வையாளர்களும் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

உத்தியோகத்தர் பற்ருக்குறை காரணமாக வேலைத் திட்டங்கள் உரிய நேரத்தில் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது.

இதைச் சாட்டாக வைத்து தேங்கிக் கிடக்கும் நிதியை வேறு மாவட்டங்களின் பாடசாலைப் புனரமைப்புக்கு மாற்றுவது குறித்து உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ - உ - 9)

### ஜனுதிபதி---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிங்கள அரசு நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு இணங்கியது.

எனவே இன்று இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்று ஜனுதிபதி திரு. பிரேமதாச கோருவது வியப்புக்குரியது அல்ல.

பொதுத்தேர்தலின் பின், நிரந்தரப் போர் நிறுத்தம் ஒன்று ஏற்படுத்துவதற்கு ஏதுவாக இந்தியப்படை பிரதான முகாம்களுக்குள் இருக்கவேண்டும் என்றும் —

புலிகளுக்கு எதிரான ஆயுதக் களைவு என்ற இராணுவ நிலைப்பாட்டை நீக்கி, பொதுமக்களுடைய நாளாந்த வாழ்க்கையில் தலையிடாது அமைதி பேணும் படையாக இருக்க வேண்டும் என்றும் — நாம் கோரிக்கை விடுத்தோம்.

விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் தற்போது பேச்சுவார்த்தை நடத்தும் கட்டத்தில் இக் கோரிக்கை அர்த்த புஷ்டியுள்ளது என்று நினைக்கின்றேன்.

எம்மைப் பொறுத்தவரையில் தமிழ்பேசும் மக்களின் அடிப்படை அபிலாஷைகள் கூட தீர்க்கப்படாத நிலையில் போராட்டம் தொடர்வது என்பது தவிர்க்க முடியாதது.

இதனை உருவகப்படுத்தும் முகமாகவே விடுதலைப் புலிகள் செயற்படுகிறர்கள் என்றே நாம் கருதுகிறேம்.

இவ்வாறு அவர் சொன்னர். [ஒ-10)

### சர்வசன-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின புதன் கிழமை செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார் - இப்படி இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### துணை அமைச்சு--

(1ஆம் பக்கத் தொர்டர்ச்சி]

தலைமை வகித்த துணை அமைச்சரின் அருகே ஜனுப். ரி.ஸ்.வி சின்னலெப்பையும் அமர்ந்தார்.

இதைக் கண்ட மட்டக்களப்பு எம். பி திரு. சாம் தம்பிமுத்து வெளிநடப்புச் செய்தார்.

மாநாட்டில் ஏனைய எம். பிக்களும் மாகாணசபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவில்லை.

தமது வெளிநடப்புக் குறித்து திரு. சாம் தம்பிமுத்து கூறியதாவது:-

புனர்வாழ்வு சம்பந்தமான மாநாட்டில அரசியல்வாதிகளுக்கு இடமில்லை;

மக்களால் தெரிவானவர்கள், மற்றும் அரசு உயர அதிகாரிகள் மட்டுமேஇப்படியான மாநாடுகளில் கலந்து கொள்ள முடியும்;

கட்சி அமைப்பாளர்களை கலந்து கொள்ள அனுமதிப்பது அரசியல் தலையீட்டுக்கு இடமளிப்பதாகும். [உ-எ-21

### அடிக்கல் நடுதல்

உடுவில் கற்பொக்கணை கலைமதி சனசமூக நிலையத்தின் புதியகட்டிடத்திற்கான அடிக்கல் உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கத்தால் நாளை10ஆம் திகதி காலை 7 மணிக்கு நடப்படும். (க)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கதிரேசு சின்னத்தங்கம்

திருமதி கதிரேசு சின்னத்தங்கம் 08- 06- 89 அதிகாலை சிவபதமடைந்துவிட்டார். அன்னர் காலஞ்சென்ற முத்தர் கதிரேசுவின் அருமை மனைவியும், திருமதி பாக்கியம், சுப்பிரமணியம் [M.T.M மன்னர்], செல்லத்துரை, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, திருமதி அன்னபூரணம் துரைராசா [தொலைபேசித் திணைக்களம் கொழும்பு], திருமதி சின்னத்தங்கச்சி, சண்முகம் [உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், சண்டிலிப்பாய்] அண்மையில் அகாலமரணமடைந்த கோபாலபிள்ளை [முன்னுள் கல்வி அலுவலக உத்தியோகத்தர் ஓமான்] ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற கனகசபை, காலஞ்சென்ற செல்லம்மா, பூமணி, தாமோதரம்பிள்ளை, பொன்னுத்துரை, அன்னலட்சுமி, முத்தையா [நோமதீஸ், மன்னர்], செல்வநாயகி [ஆசிரியை, சண்டிலிப்பாய்], சகுந்தலாதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னரின் ஈமக்கிரிகைகள் 10- 06- 89 சனிக்கிழமை நாளை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இறுதிச் சடங்கிற்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

தகவல்:
— க. சுப்பிரமணியம்

24/3 சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.

(885)

### Dr. முத்துச்சாமிப்பிள்ளை இராமநாதன் (R. M. P)

இளைப்பாறிய பதிவு வைத்திய அதிகாரி மு. இராமநாதன் [R. M. P] அவர்கள் காலமாகிவிட்டார். அன்னர் காலஞ்சென்ற முடிக்குரிய வழக்கறிஞர் ஸ்ரீமான் முத்துச்சாமிப்பிள்ளை திருமதி தையலம்பாள் முத்துச்சாமிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், திருமதி அருள்ஜோதி இராமநாதன் (இளைப்பாறிய Matron அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் திரு. ஜோர்ஜ் செல்வகுமார் [கனடா], ஞானதனுஷா [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி] அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி மங்கையற்கரசி நவரெத்தினம் [இளைப்பாறிய ஆசிரியை] காலஞ்சென்ற நகுலேஸ்வரி பாலசுப்பிரமணியம் [ஆசிரியை] திரு. யோகநாதன் [கனடா] திருமதி M. சரஸ்வதிதேவி, திருமதி மகேஸ்வரி சந்திரசேகரம் (கனடா), திரு. இராஜநாதன் (கனடா) அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற ந. நவரெத்தினம் (Suvreyor), திருமதி ரமேஷ், இராஜநாதன் (கனடா), திருமதி இராஜமலர் யோகநாதன் (கனடா) அவர்களின் மைத்துனரும், திருமதி சுமதி ஜோர்ஜ் செல்வகுமார் அவர்களின் அன்பு மாமனுரும் ஆவார். அன்னரின் பூதவுடல் 9.6.1989 இன்று வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
திருமதி M. சரஸ்வதிதேவி
(தேவி)
சகோதரி

389, K. K. S. RD,
யாழ்ப்பாணம்.

(11205)

### செல்வி குமரேசு ஸ்ரீஜெயக்குமாரி

யாழ்ப்பாணம், 228/1, நாவலர் வீதியில் வசித்த செல்வி ஸ்ரீ ஜெயக்குமாரி 07 - 06 - 1989 மாலை காலமானர்.

இவர் புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற மு. குமரேசு, திருமதி கு. பரமேஸ்வரி ஆகியோரது அன்புப் புதல்வியும், பாலகுமார் (பிரான்ஸ்), சாந்தகுமார் (U. K), உதயகுமார், மோகனகுமார் (பிரான்ஸ்), விஜயகுமாரி (இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரது அன்புச் சகோதரியுமாவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் 8- 6- 89 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெற்றேறியது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

தகவல்:
கு. உதயகுமார்.

228/1, நாவலர் வீதி,
இலுப்பையடிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(11208)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 193/3 இல் உள்ள அச்சகத்தில் 09-06-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org